முரசொலி

வார இதழ்

ஆசிரியர் மு. கருணாநிதி

முரசு 3 | 6-7-56 வெள்ளி | ஒலி 13

கண்ணடக்கம்

பக்தன் ஒருவன் பதைக்கப் பதைக்க ஓடினுன். அவன் கால்கள் தடுமாறின. வியர்வையால் மேனி குளமாயிற்று. தலைமுடி அலங்கோலமாய் விரிந்து காற்றில் பறந்தது. நெற்றியிலே பூசியிருந்த திருநீறும், அதன்மேல் வைத்திருந்த அகலமான குங்குமப் பொட்டுங்கூட வியர்வையிலே கரைந்து ரத்தமும் சீழும் போல அவன் கன்னங்களில் வழிந்துகொண்டிருந்தன. புரையோடிவிட்ட புண்ணிலிருந்து கிளம்பிய துர்நாற்ற அருவிபோல் இருந்தது அந்த பக்தனின் முகக் காட்சி. தேவீ! தேவீ!! காளிகாதேவீ!!! என்ற அலறல் வேறு!

நல்ல இருட்டு! கரைபுரண்டோடும் ஆற்று வெள்ளம். அதன்மீது ஒரு மூங்கில் பாலம் அதிலே நிதானமின்றி பக்தன் ஓடினுன். கரையோரத்துச் சுடலையிலே எரிந்துகொண்டிருந்த ஒரு பிணத்தை ஆற்றுத் தண்ணீர் இழுத்துக்கொண்டு வருகிறது. அதை பக்தன் பார்த்தான். லோகமாதா! என அலறிக்கொண்டே திரும்பினுன்! தீவட்டிகளோடு நாலைந்து பேர் வந்துகொண்டிருந்தனர். ஒருவன் கையிலே கொள்ளிச் சட்டி. பிணந் தூக்கிக்கொண்டு வந்தார்கள். இது ஆற்றிலே மிதக்கும் ஈரப்பிணமல்ல! புதிய பிணம். மூங்கில் பாலத்தில் பக்தன் நின்றுன். ஒரே அமைதி. புதிய பிணம் எரிய ஆரம்பித்தது. அதன் சொந்தக்காரர்கள் பிரிந்துவிட்டார்கள். இனி அது நெருப்புக்கோ, அல்லது ஆற்றில் தெரியும் வாளை மீனுக்கோ சொந்தம்.

காலையில் சொந்தக்காரர்கள் உயிரோடிருந்தால் எலும்பு அள்ளிக் கொட்ட அங்கே வருவார்கள். அதற்குள் ஆறு அந்த வேலையைச செய்தாலும் செய்துவிடும். பெருமூச்சு விட்டபடி மீண்டும் ஓட்டப் பயணத்தைத் தொடர்ந்தான் பக்தன். எதிரே சில தீவட்டிகள். பாடையல்ல! நீண்ட கழியில் ஒரு துணி ஏணை! அதிலே ஒரு குழந்தை. விழிக்காத நித்திரை. கொள்ளிச் சட்டி கிடையாது. மண் வெட்டிகள் தூக்கி வந்தார்கள் சிலர். புதைக்கும் பிணம் போலும்! பக்தன் முன்னிலும் பன்மடங்கு வேகமாக ஓட ஆரம்பித்தான். காலிலே கருவேல முட்கள் தைத்துக் கொண்டன. அதையும் அவன் கவனிக்கவில்லை. கரையோரமுள்ள தாழை மடல்களிலே அவன முகம் உராய்ந்தது. அதையும் அவன் கவனிக்கவில்லை. பழனிக்குப் பால் காவடி எடுப்பவனின் உடலிலே காணப்படும் அலகுகள் போல—சிலாகைகள் போல அவன் உடலெங்கும் முட்கள் நீட்டிக் கொண்டிருந்தன. எதிரேயுள்ள பாழுங் கிணற்றை எப்படித்தான் தாண்டினுனே தெரியாது. பார்ப்பதற்கே பயங்கரத் தோற்றமளிக்கும் பாவாடைராயன், காத்தவராயன் கோயில்களை எப்படித்தான் கடந்தானே அவனுக்கே தெரியாது! ஊர்க்கோடிக்கு வந்து சேர்ந்தான். அதோ...ஒரு கோயில்...சுற்றிலும் காடு—உள்ளே அந்த ஆலயம்!—அம்மா! தாயே!! எனக் கத்தினுன். ஆவேசம் வந்தது போல் ஓடினுன். கதவு பூட்டியிருந்தது. மதிற் சுவரின் மீது தாவினுன். அடுத்த பக்கம் குதித்தான், எதிரே காளிகாதேவியின் உக்கிரமான உருவம். உறுமும் சிங்கம்—உதிரம் கொட்டும் தலை—எல்லாம் சிலை வடிவில் தான! அதனுல் பக்தன் அச்சமின்றி அம்மையின் அருகே சென்றுன். "பத்ரகாளீ! மகா தேவீ!! மகிஷாசுர மர்த்தனி!!!" என்று கூவினுன்.

"யார் அது?" காளி கேட்டாள்.

"என்னைத் தெரியவில்லையா?" என்று கதறினுன் பக்தன.

"தெரியவில்லை...சொல்!"

"நான்தான் உன் பக்தன்—காளிதாசன்!"

"எந்தக் காளிதாசன்? நாக்கிலே எழுதி நாவலனுக ஆக்கினேனே; அந்தக் காளிதாசனு?"

"இல்லை தாயே...நான் அவனில்லை! நான் இயற்கையிலேயே கொஞ்சம் புத்திசாலி! ஆனுல் உன் பக்தன்!"

"சரி போகட்டும்—பக்தா! என்ன வேண்டும் உனக்கு?"

"என்ன தாயே...இப்படிக் கேட்கிருய்? ஊரிலே சூறை நடக்கிறதே உனக்குத் தெரியாதா?"

"சூறையா?"

"ஆமாம் தேவி! கொள்ளை கொள்ளையாக மக்கள் சாகிருர்கள். கொடுமையான வாந்திபேதி! கொடிய விஷக் காய்ச்சல்! பிளேக்காம்; புதுவித இங்கிலீஷ் வியாதி! காமாலை!...அய்யய்யோ

★ தொடர்ச்சி 4-ம் பக்கம்

அரசுகட்டிலின் ஆணை கேட்டு அதிர்ந்தது முரசு கட்டில்! வாள் வடிக்கும் கொல்லன் உலைக்கூடம் அன்று யானை புகுந்த வெண்கலக் கடையாகி விட்டது. திரண்டெழுந்த வீரர்களெல்லாம் கையிலே கிடைத்ததை எடுத்துக் கொண்டு களம் நோக்கி ஓடினர்!

'வா! வா! பகையே; எத்தனை நாள் காத்திருந்தேன்!' என்று எக்காளக் குரல் எழுப்பி ஏறு நடை போட்டனர், போரில்லா நாளெல்லாம் பிறவாத நாளென்றெண்ணும் அம் மாவீரர் படை வரிசை!

சூழ வருகுது பகை; சூழ்ச்சி உருவாகுது! ஆழிநீர் கடல்சூழ் உன் நாட்டின் எல்லையிலே அன்னியன் காலடி படுவதா? பீடு குறையா உன் இனப் பெற்றி மாற்றான் எழுப்பும் வெற்றி முழக்கத்திலா மணமுடிப் போகவேண்டும்! வீரனே! நான் பெற்ற தீரனே! நலம்பாடும் தமிழ் மகனே! பகை என்றால் — புழுதிப் புகை என்பாயே! போர் என்றால் — உன் பொருதடக்கை வாள் எங்கே? பொங்குமணி மார்பெங்கே? போர்க் களத்தில் எவர் வரினும் புறங்கொடாப் பருவலரத் தோள்கள் எங்கே? எங்கே?

துந்துபி முழங்கிற்று! தந்தையர் நாடு; என் தாய்த்திருநாடு; முந்தையர் நாடு; வந்தவனுக்கெல்லாம் வேட்டைக் காடா? என்றான். வாள் எடுத்தான்; தூர விலகி நில் பகையே! தள்ளி வருகுது வேல்! என்று சூள் உரைத்தான். பகைக் குலத்தைக் கிழித்தெறிய ஆயிரத்திலோர் வீரனாக அவனும் புறப்பட்டான்—புயல்போல, புலிபோல!

வீரம் சதிராடும் அப் போர்க் களத்தில் வெற்றி மழை பொழிந்தான்! தமிழ் அன்னையின் பொன் தவழ் மேனியிலே ரத்தத் திலக மிட்டான். ஆனாலும் வெற்றியா? தோல்வியா? முடிவே தெரியவில்லை! இருதரப்பிலும் பிண மலைகள். அந்த போர்க்களமே ரத்த ஊற்றெடுக்கும் பூமியாகிவிட்டது! இப்படிப் பல நாட்கள். உருண்ட தலைகள் எத்தனை; உயிரற்ற சக்கைகளாக வீசப்பட்ட மனித ஜடங்கள் எவ்வளவு? கண் இழந்தோர்; கரம் இழந்தோர், குற்றுயிராய்க் குடல் சரிந்து கிடந்தோர்; சிரம் துண்டிக்கப்பட்ட குதிரைகள்; துதிக்கை இழந்து கோரமாகப் பிளிறிவிழும் மலையொத்த யானைகள்—இத்தகைய பயங்கரக் காட்சிகளைக் கண்டான்; அம்மவோ! அப்பொழுதும் கலங்கினானில்லை! கண்களில் கனல் பாய்ச்சி, சுழற் காற்றென அடிகளத்தைக் கலக்கினான். முடிவில் ஒரு நாள் வெற்றிமாலை அவன் தோள்களிலே புரண்டது. வீர விருது பெற்றான். மன்னனின் கைலாகு, மகுடத்தின் பாராட்டு—அதோடு போர் தந்த வெற்றி, தன்னை மறந்த ஓர் இன்பம்; இன்னதென்று விளக்கமுடியாத ஓர் போதை! அதிலே மிதந்து கிடந்தான். நாட்கள் உருண்டன; காலம் செல்வதையே மறந்து போனான். கடமை — அதைச் செய்துவிட்டோம்! தாயகத்தின் மீட்சிக்கு நம் பங்கினைச் செலுத்திவிட்டோம்-என்ற களிப்பு அவனுக்கு! அந்த களிப்போடு களம் தந்த வடுக்களை தடவிப் பார்ப்பதால் ஏற்பட்ட புதியதோர் உறசாகம் அவனைப் பெருமிதம் கொள்ளச் செய்தது. கடமை முடிந்தது! அவனுக்காக காலமெல்லாம் காத்திருந்தவளின் நினைவும் வந்தது; இயற்கைதானே!

மறு நாள்...

காற்றைக் கிழித்துச் செல்லும் வெண்புரவிகள் பூட்டப்பட்ட பெருந்தேரில் ஏறி வருகிறான் அந்த அடர்ந்த காட்டில், முயற் கூட்டமும், மானகுட்டிகளும் சிதறியோடி புதர்களில் ஒளிந்து கொள்ளும்படி அவ்வளவு வேகமாக அந் நெடுந்தேர் வந்து கொண்டிருந்தது. போர் தந்த போதை தணிந்திருந்ததால், 'புறம்' நீங்கி அம் மாவீரனின் நெஞ்சிலே 'அகம்' ஊற்றெடுத்தது.

"பாகனே! தேரை விரைவாக ஓட்டு!"

"இதை விடவா...!"

"இதென்ன வேகம்! இதனினும் வேகமாக ஓட்டு! நீதான் வலிமை மிக்கவனுயிற்றே!"

"வலிமைமிக்கவன்தான், ஆனாலும் உங்கள் மனோ வேகத்தோடு என் குதிரைகளால் போட்டியிட முடியாதே!"

"குறும்புக்காரனடா நீ; சரி சரி ஓட்டு!"

★

அவன் தேரிலே வந்துகொண்டிருக்கும்போது, அவன் கண்ணில் பட்ட ஒவ்வொரு காட்சியும், அவன் 'இன்ப ரோஜா'வையே அவன் கண்முன்னால் கொண்டு வந்து நிறுத்திற்று. எனவே அவசரப் படுத்தினான்.

அக் காவி விழியாளை, கண் போன்ற தாமரையாளை, இனியும் தனிமைத் தீயால் கருகவிடக் கூடாதென்று கருதினான் அவளை சந்தித்தபோது! அவன் அவளிடமிருந்து விடைபெற்று வந்தபோது வனப்புள்ள ஓவியமாக இருந்தவள், இன்று மெலிந்து — நலிந்து — கை வளை தளர்ந்து — கனக இதழ்கள் வற்றிப்போய் — மலைக் காய்ச்சலால் உறிஞ்சப்பட்டவள் போல, வற்றி வெளிறிக் கிடந்த கொடுமையைக் கண்டான். அவன் கண்கள் கலங்கின. 'இந்தக் கொடுமைக்கு நான் தானே காரணம், குலவிளக்கே! இனியும் உன்னை நான் இப்படித் தவிக்கவிட மாட்டேன்; பிரிவோடு பிரிவு — இன்னும் சில நாட்கள், என அன்பே! கொஞ்சம் பொறுத்துக்கொள், பொருளோடு திரும்பி வருகிறேன்; உன்னையும் என் பொருளாக்கிக் கொள்ளகிறேன; நான் போய்த் திரும்பும் வரையில் கலங்காமல் நீ இருக்கவேண்டும்! துணையோடு உலவும் அன்னமும், ஜோடிப் புறாவும், பேடையோடு உலவும் சேவலும் உன நெஞ்சிலே நெருப்பு அலைகளை வாரிவீசும்—அறிவேன் நான்! என் அன்னமே! இன்னும் சிறிது நாட்கள்தான, கண்ணல்ல! கண்ணீரைத் துடைத்துக்கொள்! களவொழுக்கத்தை முடித்து விட்டு இல்லறத்தில் புகவிருக்கும் அந்த இன்ப நாளை விரைவில் எதிர்நோக்கி இரு! நான் வெற்றியோடு திரும்பி வருகிறேன்.

களத்திற்குச் சென்றவன் இத்தனை நாட்களாக வரவில்லையே என்ற கவலையால் மெலிந்து கிடந்த அந் நங்கையின் உள்ளத்திலே மீண்டும் தலைவன் தூக்கிப் போட்ட இப் பேரிடிகள் புயலைக் கிளப்பிவிட்டன.

"இன்றுதான் வந்தீர்; ஏனத்தான்! இதற்குள்ளாகவா பிரிவு; நன்றுதானு நீங்கள் செய்வது? தோனறி மறையும் மின்னல் போல வந்து என் நெஞ்சிலே துயர பாரததைக் குவித்துவிட்டுப் போகிறீர்களே நியாயமா அத்தான்!" கண் கலங்க, கன்னங்கள் சிவப்பேற, துடிக்கின்ற இதழோடு தன் துயரத்தை வெளியிட்டாள் அத் தோகைமயில்!

மலைப்பாறைபோல் விரிந்திருந்த தன் மார்போடு அவள் நிலா முகத்தை சேர்த்தணைத்தான்; கூந்தல் கோதி, குமுத இதழ் பிளந்து 'இச்'சென்று முத்தமிட்டான் 'இனபமே! கலங்காதே; இதயம் உண்டு எனக்கும்; விரைவில் திரும்பிடுவேன்; விடை கொடு!' என்றான்.

அதற்கு மேலும் உடனிருந்த தோழியால் வாயடைத்து நிற்க முடியவில்லை!

'என்ன மனுஷரய்யா நீர்' என்ற பாணியிலே தலைவனைமேல் கேள்விக் கணைகளைப் பொழிய ஆரம்பித்தாள்.

தண்ணீரிலே முழுகி மூச்சுத் திணறுபவன்போல் ஆகிவிட்டான் தலைவன்.

சுற்றத்தார் வாழ்கின்ற ஊருக்குச் சென்று அங்கே பொருள் தேடி—தலைவியை விரைவில் திருமணம் செய்துகொள்வதாக அறிவித்தான். இரண்டு திங்கள்தான், அதற்குள் வெற்றியோடு திரும்புவதாகவும் உறுதி சொன்னான்.

தலைவனின் நிலை கண்டாள் தோழி; உண்மையிலேயே தோழிக்கு தலைவனிடம் பரிதாபம் வந்துவிட்டது. என்றாலும் தோழியின் கடமையை அவளும் மறந்தாளில்லை.

'அடித்தாலும் அணைத்தாலும் நீதானே அவளுக்கு கதி!' எனபதையே சற்று நாகரீகமாக, இலக்கிய முலாம் பூசி நீட்டுகிறாள் அத் தோழி!

அவள் கூற்றாக, சங்ககாலத்து இலக்கியச் சோலையிலே நடை போட்ட அம்மூவனார் என்ற புலவர் பெருந்தகை நயம்பட நெய்திருக்கும் அக் கவிதை வரிகள் எண்ணி எண்ணி இன்புறத் தக்கனவாக உள்ளது.

உயர் எண்ணங்களுக்கு உபமேயம் காட்டுவதில் ஒப்பற்ற சொல்லோவியரான அப் புலவரின், சுந்தரத் தமிழ்ப் பின்னல், சொற் சுவையும், அந்த சுவை தமிழ் பேசும் கதாபாத்திரங்களைக் கண்முனனால் உயிர் சித்திரங்களாக நடமாட விடும் பெற்றியும், தமிழ் இலக்கியத்தின் மீது கூறும் புகழ் பட்டயங்களாகும்.

'தலைவனே! என் தலைவி இனி தங்களுடைய கைப்பாவை. அவளுக்கு இன்பமும் துன்பமும்; வாழ்வும் தாழ்வும் எல்லாம் நீங்கள் தானே! சினம் கொண்ட தாய் குழந்தையை அடித்தாலும், அது 'அம்மா, அம்மா' வென்று அவளையே விளித்து, அவளிடமே முறையிடுவதுபோல, நீ என் தலைவியை வாழவிட்டாலும், வதைத்தாலும் அவள் உன் பொறுப்பு!'

"அம்மா! அம்மா! என்று விளிக்கும் குழந்தை போல;

"என் தலைவியும் அத்தான்! அத்தான்! என்று உங்களையே விளித்து அழுகின்ற நிலையிலே தான இருக்கிறாள். தலைவனே! அதைமட்டும் நீ மறந்துவிடாதே!" என்று அறிவுரை கூறுகிறாள். இல்லை இல்லை; தோழியின் வாயிலாக அம்மூவனாரின் தமிழ் அறிவு இலக்கிய வானிலே சிறகடித்துப் பறக்கிறது! 'குறுந்தொகை'யில் காணக் கிடக்கும் அந்த தேன் துளிகள் இதோ;

"தாய் உடன்று அலைக்கும்
காலையும் வாய்விட்டு
அன்னா என்னும் குழவி போல
இன்னா செயினும் இனிதுதலை
யளிப்பினும்
நின்வரைப் பினள் என் தோழி
தன் உறு விழுமம் களைஞரோ
இலளே"

(வி)

சென்னை 6-7-56 வெள்ளி

'படுகொலை' நாடகம்!

தெற்கு தாழ்கிறது; வடக்கு உயர்கிறது—இதற்கான காரணங்களை இன்று காரசாரமான விவாதத்துக்குரிய பிரச்னையாக்கிய பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்துவிட்டது.

தேசியக் கூடாரத்திலுள்ள அரை குடங்களும், ஜடப் பொருள் நிகர்த்தோரும், கரை படிந்த மனத்தினரும் உண்மைக்குத் திரையிட முயன்ற நிலைமை மாறி மந்திரி பீடத்தில் அமர்பவர்களே இன்று பொதுமக்களுக்குப் பதில் கூறவேண்டிய தருணம் பரிணமித்திருக்கிறது.

குருடனும் ஒத்துக்கொள்வான்; பொருளாதாரம் புரியாத பேதை நெஞ்சினரும் மறுக்கமாட்டார்கள் தென்னகம் தேம்பியழும் நிலையிலே; தேவைகளை மட்டுமே உரிமையாக்கிக் கொண்டிருக்கும் விதத்திலே; நசுக்கப்பட்டு, அழுத்தப்பட்டு, அவமதிக்கப்பட்டு, அதன் குறைவற்ற செல்வங்கள் யாவும் தீண்டுவாரற்ற கதியிலே மண்ணுக்கு அடியிலும், மலையின் பிடியிலும், நீரின் இடையிலும் இயற்கை விதிகளின்படியே கிடந்து வருவதை, மாபெரும் சற்பனையை உருவாக்க நினைப்பவர்கள் தவிர மற்ற யாரும் மறைக்க முயலமாட்டார்கள்!

ஆனால் நம் தேசியத் திருவாளர்களோ; எதிர்க் கட்சியினர் குறை பட்டுக் கொள்வதைக் காட்டியாவது டெல்லி பீடத்திடம் அதிகம் பெறுவதற்கு முற்படாமல் பேருண்மைக்குப் புதைகுழி தோண்டுவதிலே ஈடுபட்டு வருகிறார்கள்!

சென்ற கிழமை மட்டும் மூன்று அமைச்சர்கள் 'தென்னாடு புறக்கணிக்கப் படவில்லை; நல்ல முறையில் கவனிக்கப் படுகிறது' என்பதை நிலைநாட்ட தலைகீழ்ப் பிரச்சாரம் செய்திருக்கிறார்கள்!

ஆனால் இந்த 'உண்மை ஒளிப்பு' வைபவத்திலே முழு மூச்சுடன் கலந்துகொண்ட மூன்று அமைச்சர்களிலே ஒருவராவது சரியான காரணங்களைக் காட்டி திட்டங்களை நீட்டி - தென்னகத்து மாந்தரது மனத்திலே புகைவிட்டுக் கொண்டிருக்கும் எரிமலையை நேர்மை வழியிற் சென்று அணைக்க முயன்றதாகத் தெரியவில்லை.

காமராசர் ஒருபுறம் — சுப்ரமணியனார் ஒருபுறம்—டி டி. கே. மற்றொரு புறம் — மும்முனையிலிருந்து பறந்துவந்த பதிலென்னும் ஈட்டிகள், அவர்கள் வடநாட்டுப் பீடத்தின் கூலிகள் என்ற முறையிலே வீசப்பட்ட வெறுங் கணைகளாகத்தான் தோன்றுகின்றன.

நாம் நடத்திய கண்டன நாள் கூட்டங்கள்; சுவரொட்டிகள் வீண் போகவில்லையென்றாலும், அந்த மூவர் பாடிய திருவுலா—முயன்று, அரும் பாடுபட்டுத், தேடி, புள்ளி விவரங்களை நாடி பதில் கூறவேண்டிய இடத்திலே நம்மை வைக்கவில்லை.

சுப்ரமணியமே செப்பியிருக்கிறார், சென்னை வானொலிச் சொற்பொழிவின்போது :

" (தொழிற் பெருக்கம் சம்மந்தப்பட்ட மட்டில் தென்னாட்டிற்கு உரிய பங்கு தரப்படவில்லை என்னும்) இந்தப் புகார் ஒரு அளவு வரையில்தான் சரியாய் இருக்க முடியும் "

—நிதி அமைச்சரது பேச்சு இது! ஒரு அளவு வரைதான் சரியாய் இருக்க முடியுமாம்!

—குற்றவாளியின் வாயிலிருந்தே குற்றச்சாட்டு நிரூபணமாகிறது— ஒரு அளவு தெற்கு தாழ்த்தப்படுகிறது என்னும் வாதம் உண்மைதானாம்!

—அந்த அளவுக்காவது நாம் மகிழ்வடைகிறோம், தேசியக் கூடாரம் போட்டுவைத்த இருட்டுத் திரையிலே கிழிசல் விழுந்து, அதன் மூலமாவது உண்மை உதய சூரியன்போல நாட்டவரின் கண்ணுக்குத் தெரிகிறதே என்று!

பாவம்; அந்த மூவர்மீதும் தப்பில்லை. 'நான் என்ன செய்யட்டும்—எல்லாம் என் கர்மவினை! என் தலைவிதி!' - என்று முணகியபடியே ஒரு சமுதாயம் குப்பை கூட்டியும், தோட்டித் தொழில் புரிந்தும் வாழவில்லையா; அந்த முறையிலே 'ஏகாதிபத்யத் தலைவிதி'யைச் சுமந்து கொண்டு அரசியல் குப்பைமேட்டைக் கிளறிக் கொண்டிருப்பவர்கள், அவர்கள்! டெல்லி பீடத்தவர்கள் இந்த மண்ணிலே செய்து வைக்கும் அசுத்தங்களை அப்புறப்படுத்துவதற்கென்றே அமர்த்தப்பட்டிருப்பவர்கள், அவர்கள்! அதனால்தான் 'ஓரளவாவது' உண்மை நிலையை ஒத்துக் கொண்டது நமக்கு உவகை யளிக்கிறது!

ஆனால் டி. டி. கே. யோ, நம் கேள்விகளுக்குப் பதிலளிக்காமல் கிண்டல் புரிந்திருக்கிறார்—கேலி செய்திருக்கிறார்!

ஈழத்திரு நாட்டிலே இருபத்தைந்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டும், நமது அமைச்சர்கள் வாய் திறக்காமல் மௌனமாயிருப்பதை எடுத்துக் காட்ட தி. மு. க. தலைமை நிலையம் தயாரித்திருக்கும் சுவரொட்டிகளைப் பார்த்து, ஏதோ 'படுகொலை' என்னும் நாடகச் சுவரொட்டிகளைத்தான் ஒட்டியிருக்கிறார்கள் என்றல்லவா நினைத்தேன்!—எனக் கேலி செய்தாராம்!

படுகொலை நாடகம்—நாமா நடத்துகிறோம்? இந்திய அரசியலை மேடையாகக் கொண்டு உண்மையான பிணங்களை மலைமலையாய்ச் சாய்த்து அவர்களன்றோ 'படுகொலை' நாடகம் நடத்துகிறார்கள்!

தனி நாடு கேட்கும் நாகர்கள்—ஈசல் பூச்சிகளைப் போல மதித்து சுட்டுக் கொல்லப்படுகிறார்கள், அஸ்ஸாம் எல்லைப்புறத்திலே!

விநாடிக்கு விநாடி அங்கே விழுகின்ற பிணங்களின் எண்ணிக்கை வளர்ந்து கொண்டே போகிறது.

"பிரிந்து போக நினைப்பது பைத்யக்காரத்தனம்"—என்று பந்த் அவர்களின் வாழ்த்து முழங்க, நாகசம்காரம் தொடர்ந்து நடந்தபடி தான் இருக்கிறது!

அவர்கள் பிரிந்துபோக நினைப்பது பைத்தியக்காரத்தனமாம்!

ஆனால் அதே நேரத்தில் இவர்கள்தான் சொல்கிறார்கள் அல்ஜீரியாவைக் கொடுத்துவிட்டு பிரெஞ்சுக்காரர்கள் வெளியேற வேண்டுமென்று!

அதற்கான காரணங்களையும் ஜூன் 27-ந் தேதிய சுதேசமித்திரன் தலையங்கம் கூறுவதைக் கேளுங்கள்:

"அந்நிய ஆட்சி எவ்வளவு செம்மையாக நடந்தாலும் தங்களுக்குத் தேவையில்லை; தங்கள் நாட்டில் தங்களுக்கே ஆள உரிமையுண்டு என்று வலியுறுத்தும் அல்ஜீரியரிடம்தான் இன்று உலகில், நீதியில் நம்பிக்கையுள்ள மக்களின் அனுதாபமெல்லாம்!"

அந்நிய ஆட்சி எவ்வளவு செம்மையாக நடந்தபோதிலும் அந்த ஆட்சி தேவையில்லை என்று அல்ஜீரியா வாழ் மக்கள் சொல்லலாமாம்! அப்படிச் சொல்கிற அவர்கள் பக்கம்தான் நீதியில் நம்பிக்கையுள்ளோரின் அனுதாபமெல்லாம் இருக்குமாம்!

ஆனால் அதே பதில்—அந்நிய ஆட்சி எவ்வளவு செம்மையாக நடந்த போதிலும் அந்த ஆட்சி தேவையில்லை—யென்று சொல்கிற அந்த பதில் சுதந்தரத் தென்னகம் கேட்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திடமிருந்தோ அல்லது நாக நாடு கேட்கும் நாகர்களிடமிருந்தோ வரக்கூடாதாம். அப்படி அவர்கள் சொன்னாலும் அது பைத்யக்காரத்தனமாம், அமைச்சர் பந்த் அவர்களின் வாசகப்படி!

பிரெஞ்சுக்காரர்கள் அல்ஜீரிய நாட்டவருக்கு அன்னியர்கள்!

வடநாட்டவர்கள் நமக்கு—நாடு கேட்கும் நாகர்களுக்கு அந்நியர்கள்!

கேலிபுரியும் கிருஷ்ணமாச்சாரிகளாலும், மித்திரன் வர்க்கத்தினராலும் இந்த உண்மையைப் புரிந்து கொள்ள முடியவில்லை. பாவம்; என்ன செய்வார்கள்! அவர்களெல்லாம், மோதிலால் மைந்தரைக் கதாநாயகனாகவும், பந்த் போன்றோர்களை திரை தூக்கிகளாகவும் கொண்டு இயங்கிவரும் 'படுகொலை' நாடகத்தின் பபூன்கள்தானே! பேசட்டும்; பேசட்டும்—நகைச் சுவை என்று நினைத்துக் கொண்டு எதையாவது பேசி வைக்கட்டும்—எத்தனை நாளைக்குத்தான் உண்மைக்குக் கதவைத் தாளிட்டு வைக்க முடியும்?

○ ★ ○

கண்ணடக்கம்...

★ 1-ம் பக்கத் தொடர்ச்சி

...சொல்லத்தரமல்ல தாயே; கூடை கூடையாகக் குழந்தைப் பிணம்—பாடை பாடையாக பெரிய பிணம்!"

"அய்யோ... அப்படியா?... எனக்குத் தெரியாதே!"

"உண்மைதான் அம்மா உண்மைதான! உன் மக்கள் அனைவரும் இன்னும் ஓரிரு நாட்களில் ஒழிந்து விடுவார்கள்!"

'பக்தா! நான் ஒன்று சொல்லுகிறேன், கேட்கிறுயா?"

"ஆயிரம் சொல் அம்மையே!"

"கொடிய நோயினல் அழிந்து விட்ட குடும்பங்களில் மிச்சமிருப்பவர்களிடம் என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைச் சொல்!"

"அனுதாபம் கேட்க அடியேன் வரவில்லை சக்தீ! அபயங் கேட்க வந்திருக்கிறேன். மாளுகின்ற மக்களை மீட்பதற்கு மாதாவிடம் முறையிட வந்திருக்கிறேன். இந்த நான் வந்துவிட்டேன். இந்நேரம் எத்தனை ஜில்லிட்ட உடல்களோ; கணக்குத் தெரியவில்லை—சுடலைக்கு ஓய்வில்லை. நெருப்புக்குச் சரியான தீனி! எழுந்தருளுவாய் என்னம்மையே!"

"இயலாது அப்பனே! இயலாது! என்னை மன்னித்து விடு பக்தா—போய்வா!"

"மன்னிப்பதா? நானு? அகிலாண்டேஸ்வரியை இந்தப் புல்லன் மன்னிப்பதா? மண்டியிடுகிறேன்—என்ன கோபம் இருந்தாலும் மறந்துவிட்டுப் புறப்படு; பராசக்தி."

"புலம்பினுலும் அழுதாலும் புண்யமில்லை!"

"ஏன் காளி—ஏன்? துஷ்டர்களை அழித்து தூயவர்களைக் காப்பாற்றும் அருள் விழி பெற்றவளே! அனந்த நாயகீ! கருணை பொழியும் உன் கண்களைத் திறந்து, கதியற்றுச் சாகும் அபலைகளை, அனுதைகளை, உன திருப் புதல்வர்களைக் காப்பாற்ற ஏனம்மா தயக்கம்?"

"கருணை பொழியும் கண்கள் எனக்கு இப்போதில்லையடா மகனே!"

பக்தனின் மெய் நடுங்கிற்று. குரல் கம்மிற்று. கனைத்துக் கொண்டான பீதியோடு! காளியை நிமிர்ந்து பார்த்தான்—கர்ச்சித்தான்!

"கருணைக் கண் இல்லையா? காளியா நீ? அல்லது கனனியா? பிணக்கொலு கண்டு பெருமகிழ்வு கொள்ளும் பேய்க்கும் உனக்கும் என்ன வேறுபாடு? எருமையை வதைத்தாய்—சிங்கத்தை அடக்கினுய்—மமதையாளன சிரசை நறுக்கினுய்—அப்போதெல்லாம் உன் கண்களிலே கனல் உண்டு! மற்ற வேளைகளில் அன்புப் புனல்தானே உண்டு அப்படித்தானே கேள்விப்பட்டிருக்கிறேன்; உன்னைப் பற்றி; நீ என்னை ஏமாற்றத்தானே பார்க்கிறுய்? உன் பிள்ளைகளின் உயிர்கள் பொல பொல வென உதிரும் போது உனக்கு இந்தக் காட்டோரத்துப் 'பங்களா'விலே ஒய்வு பெறும் வேலையா? மிக நன்ருயிருக்கிறதம்மா தாய்ப் பாசம்!"

"மகனே! என்னதான் நீ திட்டினுலும், தீப்பொறி பறக்க வசை புராணம் பாடினுலும் என்னிடமிருந்து கருணையை எதிர்பார்க்க முடியாது! காளிதாசனை, காள மேகத்தை, கவிதை பாடச் செய்த காளியல்லடா நான்—இப்போது நான் கருணையற்றவள்! என் கண்களிலே அன்பின் ஒளி கிடையாது!"

இதைச் சொல்லும்போது காளியின் தொண்டை கரகரத்தது. அழுகுரல் கேட்டது. விம்மும் ஒலி பக்தனின் காதைக் குடைந்தது. பக்தன் பதறினுன்.

"ஏன் தேவி அழுகிருய்? என்ன நடந்தது?"

"உன்னைப் போல ஒரு பக்தன் செய்த வேலைதானடா எல்லாம்!"

"என்ன செய்தான்? எந்தப் பக்தன் பாதகம் புரிந்தான்? பார்வதி தேவியார் அழவேண்டிய கட்டத்தை சிருஷ்டித்தவன் யார்? பத்மாசனி! சொல்லம்மா!"

"கேள் கவனமாக! உலகத்து மக்களை யெல்லாம் ஒரு சேரக் காப்பாற்றும் திறனும் திறமையும் பெற்றவள்தான் நான்! அது போலக் காப்பாற்றியும் வந்தேன். இப்போது ஊரிலே நடப்பதாக வர்ணித்தாயே பயங்கரச் சாவும், அதற்குக் காரணமான நோய்களும்—அவைகள் எல்லாம் என் பார்வை பட்ட மாத்திரத்தில் பஞ்சாய்ப் பறக்கும். பரமசிவனுரின் நெற்றிக் கண்ணுக்குமில்லாத சக்தி என் நேத்திரங்களுக்கு உண்டு என்று அவரே கூறிடுவார் என்னை அணைத்திடும்போது! அந்தியை அழிக்கும் அக்கினியும் உண்டு—அனுதைகளை ரட்சிக்கும் அருள் நோக்கும் உண்டு: என் திருவிழிகளுக்கு! அந்தச் சக்தியைப் பாழ் படுத்தி விட்டானப்பா ஒரு பரம பாதகன்!"

"எப்படித்தாயே எப்படி?" பக்தன் பதறினுன் மறுபடியும்!

"குறுக்கிடாமல் கேள் மகனே! ஒரு பக்தன்—பணக்காரன்! அவனுக்கு ஒரு குழந்தை. அந்தக் குழந்தையின் கண்ணிலே ஏதோ சிறு கோளாறு! எனக்குப் பிரார்த்தனை செய்து கொண்டான். குழந்தையின் கண் வரவர கெட ஆரம்பித்தது. மருத்துவர்கள் மருந்துப் பச்சிலைகள் மூலம் சிகிச்சை ஆரம்பித்தனர். குழந்தைக்கு கண்கள் சுகம் பெறத் தொடங்கின. அப்போது பக்தன் எனக்கு வேண்டுதல் விடுவதாக பிரார்த்தனை செய்துகொண்டான். அதன்படி 'கண்ணடக்கம்' செய்து வைப்பதாக வேண்டிக் கொண்டான். கண்ணடக்கம் என்றல் உனக்குத் தெரியுமல்லவா?"

"ஆமாம் தேவி! தங்கத்தாலோ வெள்ளியாலோ கண் போலச் செய்து விக்ரகத்தின் விழிகளிலே பதிப்பது என்பார்கள்; நான் பார்த்ததில்லை!"

"பார்த்ததில்லையா? இதோ என் கண்களில் பதித்திருப்பதைப் பார்! இதுதான் கண்ணடக்கம்! அந்தப் பக்தன் செய்த பிரார்த்தனை!"

"அதற்கும் நான் வந்த காரியத் திற்கும் தொடர்பு என்ன தாயே!"

"முட்டாளே! இன்னும் புரியவில்லையா? கருணை காட்டிக் காப்பாற்றும் சக்தி பெற்ற என் விழிகளைத்தான் வெள்ளிக் கண்ணடக்கம் என்ற மூடி போட்டு அடைத்துவிட்டானே; நான் எப்படியடா வெளியிலே கிளம்புவது?—கண் கட்டப்பட்ட எனக்குக் கதி ஏதடா? அடைபட்ட கண்ணிலேயிருந்து அருள் எப்படியடா கிளம்பும்?"

"பக்தனல்ல அவன்! பாதகன்! தாயே! அவன்தான் அக்கிரமம் செய்தான் என்றுல், நீயாவது உடனே இந்த வெள்ளி மூடியை அகற்றியிருக்கக்கூடாதா?"

"அகற்றுவதா? பக்தன் செலுத்திய காணிக்கையப்பா இது! அகற்றுவது ஆகுமா? தகாது—தகாது!"

"பக்தன் அளித்ததை நீ அகற்றுவது தகாது! இதோ நான் அகற்றுகிறேன். உன் கண் திறக்கட்டும். கருணை பொழியட்டும். ஊரார் வாழட்டும்! உன் உலா நடைபெறட்டும்!!" என்று ஆவேசமாகப் பக்தன் பாய்ந்தான். காளியின் கண்களில் பதிக்கப்பட்டிருந்த வெள்ளிக் கண்ணடக்கத்தைப் பிடுங்கி எறிந்தான்!

காளியின் கண்களை பக்தன் உற்றுப் பார்த்தான்!

"இப்போது என்னைத் தெரிகிறதா தாயே!"

"தெரிகிறது—என்மீது பிரியமுள்ள முட்டாள் என்று!"

"என்னம்மா மீண்டும் பழி சுமத்துகிறுய்?—நன்றி காட்டு தாயே எனக்கு—நமனுலகு செல்லும் மக்களை மீட்க அன்பு மழை கொட்டும் விழிகளைத் திறந்திருக்கிறேன் நான்!"

"விழிகளைத் திறந்தாய்—ஆனல் ஒளிதர உன்னல் இயலாது! பத்து வருடமாக மூடிக் கிடந்ததால் தூர்ந்துவிட்ட கிணறுபோல ஆகி விட்டதப்பா என் கண்கள்! ஒரு ஆண்டா, இரு ஆண்டுகளா? பத்து ஆண்டுகள் அல்லவா இந்தக் கண்ணடக்கம் என் விழியை மறைத்துக் கொண்டிருந்திருக்கிறது. இனி என் கண்களுக்கு ஒளிதர, அந்த ஒளியிலே கருணை ததும்பச் செய்ய யாராலும் முடியாது! தயவு செய்து போய்விடு!" —காளி அழுகுரலோடு ஆத்திரமாகப் பேசினுள்.

பக்தன் சற்று நேரம் நின்றுன்—காளியைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தான். நெற்றியிலே மிச்சம் மீதி ஒட்டிக் கொண்டிருந்த குங்குமம், திருநீறு ஆகியவற்றை நன்ருக அழித்து நெற்றியைத் தூய்மைப்படுத்திக் கொண்டான். கோயிலிலிருந்து விடுபட்டு ஊரை நோக்கி ஓடினுன்.

எதிரே, இரண்டு மூன்று கார்களில் டாக்டர்களும் அவர்கட்கு உதவியாளர்களும் வந்திறங்கினர்கள். ஊர் மக்கள் அனைவருக்கும் நோய்த் தடுப்பு ஊசிகள் அவசரமாகக் குத்தப்பட்டன. ஊருக்குத் தேவையான—உடனடியாகச் செய்ய வேண்டிய சுகாதார வேலைகளை இரவோடு இரவாக டாக்டர்கள் செய்யத் துவங்கினர். பக்தனும் அந்தப் பணியில் முன்னின்றுன்.

★

திடீரென விழித்துக் கொண்டேன். கண் வைத்திய சாலையில் இரண்டு கண்களும் கட்டப்பட்ட நிலையில் படுத்திருப்பதை உணர்ந்தேன். எனக்குச் செய்ததுபோல எத்தனை ஆப்பரேஷன் செய்தாலும் அந்தக் காளிக்குக் கண் திறக்காது என்பதை எனக்கு நானே எண்ணிக் கொண்டு சிரித்துக் கொண்டேன்; அந்த வேதனையான வேளையிலும்!



நாகர்கோயிலில், நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக நிதிக்காக, சென்ற ஜூன் 22, 23 தேதிகளில் இலட்சிய நடிகர் ராஜேந்திரன் குழுவினர் 'மணிமகுடம்', 'புதுவெள்ளம்' நாடகங்கள் நடத்தினர். அப்போது ராஜேந்திரன் அவர்களுக்கு தோழர் தி. மனோகரன் அவர்கள் "நடிக மன்னன்" என்ற பட்டத்தை வழங்கினர். நடிக மன்னன் என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட வெள்ளிக் கோப்பையை தோழர் சாமிநாதன் அவர்கள் ராஜேந்திரனிடம் அளிப்பதைப் படத்தில் காணலாம்.

நீட்டோலை

கருணாநிதி

திரு. ஆச்சாரியார்
அவர்கட்கு,

அரசியலில் கைம்மைக் கோலம் பூண்டு தூய வெள்ளைத் துணி முக்காடிட்டு மூலையில் முடங்கிக் கிடந்த தாங்கள் சில ஆண்டுகளாக அரசியல் மறு மணத்திற்குத் துடிப்பது போன்று காணப் படுகிறீர்கள்.

பழுத்த இலை.

பல்லுப் போன கிழம்.

ஆனாலும் பருவ வேட்கைத் தணிந்த பாடில்லை யென்று நாடு பேசுகிறது. நாணம் தங்கள் தலையைக் கவிழ்த்திடவில்லை. மாறாகப் பாணம் தொடுக்கிறீர்கள், பதவிப் பேரழகன் மீது! பிறவி யெடுத்த பயனே பிறந்த குலத்தின் பெருமையை உயர்த்தித் தழைக்கச் செய்திடுதலே யென்ற பேருண்மையைக் கடைப்பிடிக்கும் கடமைவாதியன்றோ தாங்கள்! அதற்கு அரசு கையிலே யிருத்தல் இக்காலவோட்டத்திற்கு இன்றியமையாமையன்றோ! அந்நோக்கு வென்றிட தீ நாக்கு சுழற்றித் தென்புலத்தை வலம் வருகின்றீர்—அறிகிறேன். அறிகிறோம்.

'அரிகதா காலட்சேப'த்திலிருந்து அரசு இயக்குவது வரையில் அனைத்தும் ஆரியத்தின் மேன்மைக்காகவே இருந்திடல் வேண்டும் என்ற வெறிக் கொள்கையில் வளர்ந்த வேதியரல்லவா; வேதபுரத்துக் காவலரல்லவா? வடமொழி வித்தகரல்லவா? இல்லாமலா,

* நாட்டுக்கு வளம் தரும்
வள்ளல்

* நாத்திகம் சாடவந்த தெய்வம்

* அமைதிக்கு வித்தூன்றும்
அய்யன்

* ஆத்திகப் பயிர் விளைக்கும்
மெய்யன்

என்றெல்லாம் புகழ்பாடிக் களிக்கின்றனர்; தங்களால் வாழ்வு பெற்ற வர்க்கத்தார்!

கொலு மண்டபத்தில் வீற்றிருக்கும் வாய்ப்புள்ள வரையிலே கொள்கைகளைச் சட்டமாக்குவது—குள்ளநரிகள் குருதி குடிக்க வழி அமைப்பது — கோல்லைக் கதவு மூடப்பட்டு வெளியே தள்ளப்பட்டதும் "கோவிந்தநாம சங்கீர்த்தனம்" உபதேசிப்பது! கோபுரமேறி முழக்குவது! குலப் பெருமை காக்க போர்க்கொடி உயர்த்துவது — இத்யாதி! இத்யாதி!!

இந்த அரும்பெருஞ் செயல்களின் குறுகிய வடிவந்தான் தாங்கள்! என்னே இன உணர்வு! என்னே குலப்பற்று! இதில் எள்முனையளவு உணர்வும் பெறாத எம்மனோர் சிலர் இருந்தும் இறந்தவராய்த் திரிகின்றாரே; அவர்களை யெண்ணுகிறோம் — புண்ணுகிறது உள்ளம்!

"திரு" என்ற தமிழ்ச்சொல்லும் கூடாது; பதிலுக்கு "ஸ்ரீ" என்ற சொல்லை மரியாதைச் சொல்லாக்கு என ஆணை பிறப்பித்தவர் தானே தாங்கள்! அடடா—மிகச் சிறிய பிரச்சினை—அதிலே எத்துணை அக்கரை? கவலை? "ஸ்ரீ"யை நிலை நிறுத்தி விட்டீரே; அதுவன்றோ குலப் பெருமை போற்றும் கொள்கை!

இது போல எத்தனை எத்தனை நன்மை உம்மினத்துக்கு! ரத்தம் சிந்தினோம்; சித்தம் சோர்ந்தோம்- செத்து மடிந்தோம்; செந்தமிழ்ச் சோலையில் இந்தி மாட்டை முதன் முதலாக நீவிர் ஓட்டி வந்தபோது! தாளமுத்து, நடராசன் தமிழ் வளர்க்கத் தாவிய இளங்காளைகள்! அவர்களைச் சவமாக்கி மகிழ்ந்து சாணக்கிய முறுவல் பூத்தீர்.

புதிய கல்வித் திட்டம் கொணர்ந்து பூத்துக் குலுங்கும் தமிழ்ச்சிறார் எதிர் காலத்தை இருட்டாக்க முனைந்தீர். அதிலும் பூசுர வாழ்வுப் பின்னணியுடனேயே காரியமாற்றினீர். அய்யகோ, அதனை எதிர்த்துத் தமிழர் சிந்திய குருதி கொஞ்சமோ! ஏற்ற அடக்கு முறைகள் தான் சொல்லத் தகுமோ!

இப்போது கையிலே 'செங்கோல்' இல்லை. சீறிப் பாய்ந்து செயல் விளைக்கிறீர் சொந்த இனம் மந்தகாசம் குறையாது உலவுவதற்கு!

"கோரிக்கையற்றுக் கிடக்கு
தண்ணே
வேரிற் பழுத்த பலா!
சீயென்றி கழப்பட்டதண்ணே-
நறுஞ்
சீதளப் பூமாலை!"

கைம் பெண்ணொருத்தியின் கட்டழகு பற்றிக் கவிஞர் பாட்டுப் புனைகிறார் இவ்விதம். அவள் இளமை மெருகு நிறையப் பெற்றவள். இன்பம் பெற்று சலித்துப் போனவள் அல்ல! ஆண்டு அனுபவித்த முது கிழமுமல்ல! அவளைத் தான் வேரிற் பழுத்த பலா—சீதளப்பூ மாலை என்கிறார்-இங்கோ இருக்கின்ற இருட்டடிப்பு ஏடுகள் எல்லாம் நும்மை மீண்டும் மனையிலேற்ற மிகப் பாடுபடுகின்றன. நுமது கைம்மை நிலையகற்ற கவிஞரினும் அதிகக் கவலை கொண்டு, அவரினும் அழகான உவமைகளைக் கொட்டுகின்றன உம்மைப் பற்றி!

உப கண்டம் ஆளுகின்ற நேருவுக்கும் தரப்படாத இடம் தரப் படுகிறது நாளிதழ்களில் நுமக்கு! சென்னை முதலமைச்சரின் பேச்சுக்குத் தக்க இடம் தரப்படுவதில்லை; திராவிடர் இயக்கத்தைத் திட்டினாலொழிய—தங்களுக்கோ, கடுகுக் கருத்தாயினும் அதைக் கடலாக்கி வெளியிடக் காத்துக் கிடக்கின்றனர் காகபட்டர் வழி வந்த பெருமக்கள்! "கைதூக்கி விட வந்த 'கருணாமூர்த்தி' எமது ராஜாஜி" என்றல்லவா களிப்பெய்துகின்றனர். இதில் ஒரு துளி உணர்வும் எம்மில் சிலருக்கு இல்லாது போயிற்றே—அந்தோ! இழிவு! இழிவு!!

தமிழ் விழாக்களுக்குப் போகிறீர்கள்; அங்கும் இனக்காவலுக்ேற்ற சொற்பொழிவுதான் நிகழ்த்துகிறீர்கள்! தமிழ் வாழ்ந்திட வேண்டுமானால் நாத்திகம் தொலைய வேண்டும் என முழக்குகிறீர்கள். சமணரும், பௌத்தரும் தமிழை வளர்த்தனர் என்பதும், அவர்கள் யாத்த இலக்கியங்கள் சங்க நூல் வரிசையிலும், காப்பிய வரிசையிலும் வைத்துப் புகழப்படுகின்றன என்பதும் தெரிந்தோ—அல்லது தெரிந்தும் தெரியாது போலவோ—தெளிவுரையாற்றுவதாகப் பாவித்து தெற்கைக் கவிழ்க்கும் திருப்பணியைத் தொடர்ந்து செய்கிறீர்கள்.

ஆரியம்—திராவிடம் என்று பிரித்துப் பேசுவது தவறு; இரு ரத்தமும் கலந்து பல நாளாயிற்று என விளக்குகிறீர்கள். வாதத்திற்காக ஒத்துக் கொள்வோமெனிலோ பூணூல் மின்னுகிறது- புராண இதிகாசங்கள் கர்ச்சனை புரிகின்றன—நாலு வேதம்—ஆறு சாத்திரம் இவையெல்லாம் நகை முழக்குகின்றன. அக்கிரகாரம்—ஆண்டவனுக்கு மணியாட்டும் அதிகாரம்—அரசியலார் செய்கின்ற உபகாரம்—அனைத்தும் தங்கள் குலத்திற்கே! இந்நிலையில் எலிகள் குருதியும் பூனைகள் குருதியும் ஒன்றாகி விட்டது என்பது எவ்வாறு? எலி பூனையின் வயிற்றுக்குள் போன பிறகே அந்தக் கலப்பு வேலை நடைபெறும். எம்மினத்துப் பண்புகளுக்குத் தலை வணங்கும் பெருங் குணம் இல்லா சிறுமதியாளர் கும்பலன்றோ ஆரியச் சேரி! அஃதெங்ஙனம் திராவிடப் பண்பாட்டுடன் இரண்டறக் கலக்க இயலுமென சொல்லாமற் சொல்லுகின்றீர் எழுத்தின் வாயிலாகவும்—பேச்சின் வாயிலாகவும்! இப்போதும் தப்பிவிட வில்லை; திராவிடப் பண்புகளையேற்று ஒழுக முனைந்தால் தப்பினீர்கள் என எச்சரிக்கை விடப்படுகிறது எமது பாசறையிலிருந்து! ஏற்கத் துணிவில்லை; ஏதேதோ கூறி வாதம் புரிகிறீர். இந்நிலையில் உமது வாதம் முடக்கு வாதமே! இனத்தைப் பேணுகின்ற பிடிவாதமே!

வால்மீகி, கம்பனிலும் மேதை இவர் என்ற புகழ்பாடும் கூட்டம் இருப்பதினாலே இராமாயணத்தற்கு விரிவுரை நல்கினீர். முதல்

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

அவரும் - இவர்களும்!

★

ஜுலை 1-ந் தேதி

வெளிவந்த பத்திரிகைகளில் "திராவிடநாடு சேட்பதும்,யூனியனைவிட்டிருந்து பிரிவதும் **முட்டாள் தனம்**" என்று **காமராசர்** அரக்கோணத்தில் செய்த முழக்கம் வெளி வந்திருக்கிறது.

அதே ஜுலை 1-ந் தேதி

திராவிடநாடு பிரிவினை நாள் கொண்டாடிய **திராவிடர் கழகத்தார்** காமராசருக்குப் புகழ் மாலைகள் சூட்டி அவரை ஆதரிக்க வேண்டிய அவசியம் குறித்து, சென்னை கடற்கரையில் சங்கநாதம் செய்திருக்கிறார்கள்!

இது வரையில்...

விடிந்தால் வெள்ளிக்கிழமை! பொழுது விடிந்ததும் தன்னைப் பெண் பார்க்க வருகிற அழகப்பனை கற்பனைக் கண்களால் சுவைத்துக் கொண்டிருக்கிறாள். வேதபுரத்து சிவநேசனின் மகள் சிந்தாமணி. அதிகாலையில் தன் தோழிகள் ஆண்டாள் ராதா முதலியோருடன் திருக்குளத்தில் நீராடிக் கொண்டிருக்கிறாள். அப்போது அங்கு டைகர் வருகிறான். ஊரிலே 'மைன'ராகிய அவன் சிந்தாமணியை மணம் செய்ய முயன்று தோற்றவன். அவனது விஷமத்தால் அவள் கால் இடறி விழுந்து பிரக்ஞை இழக்கிறாள். உடனடியாக அவளை லேடி டாக்டர் ஆனந்தியின் மருத்துவ மனைக்குக் கொண்டு போகிறார்கள். ஆனந்தி ஊரிலே நல்ல பெயர் எடுத்தவள் தான். ஆனால் பாலகங்காதரத் தேவர் என்பவரின் வலையில் சிக்கி கற்பை இழந்தவள். இப்போது டைகரிடம் ரகசிய நட்பு கொண்டிருக்கிறாள்.

இதற்கிடையில் வேதபுரம் நோக்கி வந்து கொண்டிருந்த மாப்பிள்ளை அழகப்பனும், நண்பன் நயினா முகமதுவும். அன்னை தாயாரம்மாளும் டைகரின் ஆட்களால் தாக்கப்படுகின்றனர். நயினா முகமதுவின் தந்திரத்தால் தப்பி, சிவநேசரின் இல்லம் அடைகிறார்கள்.

ஆனால் சிவநேசரும் மனைவி சிவகாமியும் காலை முதல் தொடர்ந்து அபசகுனங்கள் நிகழ்வதாகச் சொல்லி, மருத்துவ மனைக்குச் சென்று பெண்ணைப் பார்க்க வேண்டாமென்று தடுக்கின்றார்கள்; வாதாடுகிறார்கள். ஆனால் அழகப்பனும் நண்பனும் தெரியாமல் மருத்துவ மனைக்குப் போய் விடுகிறார்கள்,

அங்கே டைகரின் சூழ்ச்சித் திட்டம் உச்ச கட்டத்தை அடைந்திருக்கிறது. சிந்தாமணியின் படுக்கையில் அவளுக்குப் பக்கத்தில் சிசு ஒன்று கிடக்கிறது. நர்சு "பிரசவமாகியிருக்கிறது" என்கிறாள்.

அழகப்பன் துடிக்கிறான். சிவநேசரை மனம்போன போக்கில் திட்டி விட்டு, தாயாருடன் காரில் ஊருக்குப் புறப்பட்டு விடுகிறான், அப்போது காரின் முன்னே "நிறுத்துங்கள்" என்று கத்தியபடியே வந்து விழுகிறாள் ஆனந்தி, சிந்தாமணி களங்கமுள்ளவள் என்று பொல்லாங்கு கூறி. பின் மனசாட்சிக்குப் பயந்து, அவளை மாசிலிருந்து மீட்க வேண்டி வந்தவள்தான் விபத்தில் சிக்குகிறாள். அவளை பாலையூர் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்கிறார்கள், அங்கும் வந்து விடுகிறான் டைகர். அவன் உள்ளத்தில் சிந்தாமணி மாசற்றவள்; அவள் பக்கத்தில் கிடந்த சிசு ஒரு சூதுப் பொருள், என்ற உண்மையை ஆனந்தி வெளியிட்டு விடக்கூடாதே என்ற பயம் சூழ்ந்து விடுகிறது, ஆகவே சாதுர்யமாகப் பேசுகிறான். சிந்தாமணி தவறியவள்தான்; எனினும் தன்னைப் போன்ற ஒரு பெண் வாழ்விழப்பதை விரும்பாத ஆனந்தியின் பெண் உள்ளம், "சிந்தாமணி புது மலர்" என்று பொய் சொல்லத் துணிந்து விட்டதாகச் சொல்கிறான். நம்புகின்றனர் அழகுவும், நயினா முகமதுவும், ஆனந்தியின் தூய உள்ளத்தைப் புகழ்கிறார்கள். இருவருமே ஒருவருக்கொருவர் வெளியிட்டுக் கொள்ளாமல் ஆனந்தியிடம் மனதைப் பறிகொடுக்கிறார்கள்,

நயினாவையும், தன் அம்மாவையும் பெங்களூருக்கு அனுப்பிவிட்டு ஆனந்தியின் அருகிலிருக்க விரும்புகிறான் அழகப்பன். நயினா அழகப்பனை அனுப்பி வைக்க முயற்சிக்கிறான். ஆனால் டைகரோ, அந்த மூவரையுமே ஊருக்கு அனுப்பிவிட எண்ணுகிறான்.

முடிவில் ஆனந்தியைப் பிரிய மனமின்றி, அழகப்பன் தன் தாயாருடன் பெங்களூர் புறப்படுகிறான். ஆனந்தியின் அன்பைப் பெறும் நோக்குடன், பாலையூரிலேயே தங்குகிறான் நயினா.

இதற்கிடையே சிந்தாமணி 'வழுக்கி விழுந்தாள்' என்ற பேரிடியைத் தாங்கமுடியாது தவிக்கின்றனர், சிவநேசரும், சிவகாமியும். ஆனால் தாயின் மனமே தன் மகள் களங்கமற்றவள் என்று எண்ணுகிறது. ஆகவே இருவரும் வேதபுரம் மருத்துவ மனைக்குப் போகிறார்கள், அங்கே சிந்தாமணியைக் காணோம். சிவகாமி கதறிப் புலம்ப, சிவநேசர் கலகலவென நகைக்கிறார். மகள் மானமிழந்தாள் என்று நம்பிய சிவநேசர் புத்தி பேதலித்து, வெறிபிடித்தவராய் தெருவிலே ஓடுகிறார். ஊரார் கூடி, அவரை வீட்டிலே அடைக்கின்றனர். பெற்ற குழந்தையுடன் எங்கேயோ ஓடி விட்டாள் சிந்தாமணி என ஊரார் பழிக்கிறார்கள்; இழித்துரைக்கிறார்கள். புகழடைந்தவர்களைக் கண்டு பொல்லாங்கு பேசும் பொறாமைக்காரர்கள் நிரம்பிய உலகம் சிந்தாமணி 'சீர் கெட்டவள்' என்ற முடிவுக்கு வந்துவிட்டது.

அன்று இரவு, இத்தனை இன்னலுக்கும் காரணமான டைகர் சிவநேசனின் வீட்டுக்கு வருகிறான். அத்தை—மாமா உறவு பேசி சிந்தாமணியைத்தானே தேடிப் பிடித்து அழைத்து வருவதாகக் கூறுகிறான். அப்படி அழைத்து வந்தால், அவளைத் தனக்கே மணம் முடித்து வைக்க வேண்டுமென்றும் நிபந்தனை விதிக்கிறான். சிவகாமி இக்கட்டான நிலையில் நின்று தவிக்கிறாள். டைகருக்கு உறுதி கொடுத்தால்—தன் மகள் மீது சுமத்தப்பட்ட மாசு தனது வீண்புரளி என்று டைகர் ஊரார் முன் ஒப்புக் கொள்வான் என்று கருதுகிறாள்; ஆகவே அவன் முடிவுக்கு இசைகிறாள். திட்டமிட்டு வேலை செய்த அந்த நீக்குண முரடனே தத்தளித்துக் கொண்டிருந்த அந்தத்தாயிடம் "என் மகள் உனக்கே" என்று குல தெய்வத்தின் மேல் சத்தியம் வாங்கிச் செல்கிறான்.

10

சிவகாமியிடம் பெற்ற சத்தியத்தை யெண்ணிப் பூரிப்படைந்தவாறு டைகர், நேராக ஆனந்தியின் மருத்துவ இல்லத்தை நோக்கி நடந்தான். சிவகாமி சத்தியத்திற்குப் பயந்தவள் என்பதும் அதுவும் குலதெய்வத்திற்கு மாறாக எதுவும் செய்யத் துணிய மாட்டாள் என்பதும் டைகரின் நம்பிக்கைக்கு அதிக வலுவூட்டின. மருத்துவ மனையின் மேல் மாடிக்குச் செல்லும் படிக்கட்டில் 'தட தட'வென பூட்ஸ் ஓசையைக் கிளப்பியவாறு கால்களை வேகமாகப் பதிய வைத்தான். அப்போது "என்ன சார்?" என்ற கேலி கலந்த சிரிப்போடு வேம்பு கீழிருந்து கூப்பிட்டான்- "காரியம் அநேகமாக பாதி பழுத்து விட்டது வேம்பு! ஆள், பத்திரம் தானே:" என்று ஆவலோடு வினவினான் டைகர்! 'ஓ! அதெல்லாம் பூட்டியபடியே கிடக்கிறது பொருள் உள்ளே! போகலாம்! போய் இஷ்டத்தைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்!" என்று வேம்பு பரிகாசம் செய்தான்.

"இல்லை வேம்பு! இப்போதே நான் அவளை அவள் வீட்டுக்குக் கொண்டுபோய் விடப் போகிறேன். இனி எனக்கும் அவளுக்கும் நிச்சயமாகத் திருமணம் நடந்தே தீரும். அதில் அணுவளவும் சந்தேகமில்லை!" இந்தச் சேதியை உற்சாகத்தோடு உரைத்தவாறு படிகளில் ஓடினான் டைகர்! டைகரின் மகிழ்ச்சியையும் துடிப்பையும் கண்ட வேம்பு, "சரி; என் காரியம் ஆகிவிட்டது! நான் பாலையூர் ஆஸ்பத்திரிக்குப் போய் அம்மாவுக்கு ஆக வேண்டியதைச் செய்து வருகிறேன்." என்று தலையைச் சொரிந்தான் வேம்பு, டைகர், அவனுக்கு விடை கொடுத்து. ஒரு பத்து ரூபாய் நோட்டையும் அவன் கையிலே அழுத்தி, பாலையூர் ஆஸ்பத்திரியில் நயினா முகம்மது என்று ஒருவன் இருக்கிறான்; அவன் நடவடிக்கைகளையும் கவனித்து வா என்று அனுப்பினான். நோட்டைக் கண்களில் ஒத்திக் கொண்டு பற்களைக் காட்டியவாறு வேம்பு அதைவிட்டு அகன்றான். மாடிக் கதவைத் திறந்து கொண்டு டைகர்பிரவேசித்தான். அங்கேயுள்ள ஒரு பெரிய அறையும் பூட்டப்பட்டிருந்தது, அதன் கதவையும் திறந்தான். உள்ளே இருள் சூழ்ந்திருந்தது. மின்சார விளக்கைப் பொருத்தினான். அந்த ஒளியிலே சிந்தாமணி கீழே உருண்டு கிடப்பது தெரிந்தது. அவள் கை கால்கள் கட்டப்பட்டிருந்தன. அதிர்ச்சியால் தாக்குண்டவன் போல, "ஆகா! இது என்ன கோரம்! சிந்தாமணி! உன்னை யார் இப்படி யெல்லாம் கொடுமைப்படுத்தியது?" என்று கேட்டவாறே அவளைக் கட்டுகளில் இருந்து விடுவித்தான். சோர்வுற்ற நிலையிலே சிந்தாமணி எழுந்து நின்றாள். மீண்டும் டைகர், "சொல் சிந்தாமணி! உன்னைக் கஷ்டத்திற்குள்ளாக்கியது யார்? காரணம் என்ன?" என்று ஆவலோடும் ஆத்திரத்தோடும் கேட்பது போல நடித்தான் மிகத் திறமையாக!

"தெரியாது போல ஏன் கேட்கிறாய், எல்லாம் உன் ஏற்பாடுகள் தான் என்பது எனக்கு நன்றாகப் புரிகிறது!"

"வீண் கற்பனை! சிந்தாமணி—கனவிலும் இப்படி ஒரு கஷ்டத்தை உனக்குக் கொடுக்க மாட்டேன்! என்னை நம்பு' அந்த வேம்பு இருக்கிறானே......"

"அவன்தான், மாடியிலேயுள்ள நோயாளி விடுதியில் தங்கவேண்டும் என்று என்னை அழைத்து வந்தான்! அவன்தான் என்னை அறையிலே போட்டுப் பூட்டி, டைகர் வரும் வரையில் காத்திரு என்றும் கூறிவிட்டுப் போனான். இப்போது புரிகிறதா..."

சிந்தாமணியின் கண்களில் கனல் கிளம்பிற்று. அவள் முகம் ஆத்திரத்தால் சிவப்பேறிக் கொண்டேயிருந்தது.

★ மு. கருணாநிதி ★

"அந்த வேம்பு முட்டாள்தன மாக உளறிவிட்டானே; மடையன்:" எனறு தனக்குத்தானே முணகிக்கொண்டு டைகர் அந்த அறையில் அங்குமிங்கும் உலவினுன். எப்படியும் தான் குற்ற மற்றவன் என்று சிந்தாமணியை நம்பவைத்து அவளைக் காப்பாற்றுவதற்காகவேதான் அங்கு வந்ததாகச் சொல்லி, அதன் மூலம் அவளை மகிழவைக்கவும் வேண்டும் என்று திட்டமிட்டு வந்திருந்தான். அவன் எதிர் பார்த்ததற்கு மாருக, சிந்தாமணி யின் பதில் இருந்தது!

"நான் சொல்வதை நீ நம்பித் தான் தீரவேண்டும் சிந்தாமணி! உன்னையும் எனனையும் பிரிப்பதற் காக லேடி டாக்டர் ஆனந்தி செய்த வேலை யிது! அவளுக்கு என்மீது அடங்காத மோகம். எனக்கோ உனமீது! இதை அவள் புரிந்துகொண்டு விட்டாள். உன்னையும் என்னையும் பிரிக்க சமயம பார்த்திருந்தாள். காலையில் குளக்கரையில் காதல் வேடிக்கையிலே நான் உன்மீது கல் எறிய, நீ என்மீது கடைவிழி யோட்டித் திரும்ப — தெய்வச் செயலாக நீ கீழே விழ — இந்த ஆஸ்பத்திரிக்கு வர-ஆனந்திக்கு உன்னையும் என்னையும் பிரிக்கும் வேலை சுலபமாகிவிட்டது. உன்னை யார் கண்ணிலும் படாமல் மறைத்து ஏதோ ஒரு பயங்கர மான திட்டத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிருள். அதற்குள் தெய்வம் அவளுக்குக் கூலி கொடுத்துவிட்டது கார் விபத்தில் சிக்கி பாலையூர் ஆஸ்பத்திரி யில் படுத்திருக்கிருள், உயிருக்குப் போராடிக்கொண்டு!

உன்னைக் காணவில்லையென்று உன் பெற்ருேர் ஊரெல்லாம் தேடி கடைசியில் என்னிடம் ஓடி வந்தார்கள். நான் வேம்பு பயலைக் கூப்பிட்டு மிரட்டி, கொன்று விடுவதாகப் பயமுறுத்தியதும்-அவன் உண்மையைக் கக்கிவிட்டான். அதன் பிறகுதான் ஓடிவந்தேன்— உன்னைக் கண்டேன! விடுவித்தேன்! வேம்பு சொன்னதாகச் சொன்னுயே; "டைகர் வருவார் காத்திரு!" என்பதாக! அதற்கு என்ன அர்த்தம் புரிகிறதா? உன்னை யாராலும் காப்பாற்ற முடியாது உன் ஆசைக் காதலன் டைகர் வந்தாலும் முடியாது! என்ற திமிரான பேச்சாகும் அது! நீ அவன் பேச்சைக் கேட்டுக் கொண்டு என்னை சந்தேகப் படுகிருய்"

இப்படி ஒரு புளுகு மூட்டையை அவிழ்த்துவிட்டு டைகர் நாடகமாடித் தீர்த்தான். சிந்தா மணிக்கு அவனது பேச்சை நம்பவும் முடியவில்லை. நம்பாமலிருக்கவும் முடியவில்லை. குழப்பத்திற்கு ஆளாகித் தவித்தாள்.

"எது எப்படி யிருந்தாலும் சரி; என்னை வீட்டுக்குக் கொண்டு போய் விட்டால் போதும்!" என்று தெரிவித்தாள்.

"இதோ — காத்திருக்கிறேன். உன்னை வீட்டுக்கு அழைத்துப் போகத்தானே ஓடோடியும் வந்தேன். என் சொத்து நீ! உன்னை பாதுகாக்காமல் வேறு நான் யாரைப் பாதுகாக்கப் போகிறேன்!"

"டைகர்! வீண்பேச்சு தேவை யில்லை. வீட்டுக்குப் போகலாம்!"

"போகலாம் சிந்தாமணி— ஆனால் ஒரு வேண்டுகோள்! எப்படியும் நாம் இருவரும் கலியாணம் செய்து கொண்டு சதிபதிகளாய் வாழப் போகிறோம் என பது நிச்சயமாகி விட்டது. அதனால்......

அதனால்......"

வார்த்தைகளை முடிக்க இயலாமல் தத்தளித்தவாறு அவளிடம் நெருங்கினுன் டைகர்.

அவனது எண்ணத்தை சிந்தா மணி புரிந்து கொண்டாள். அவள் உடலும் உள்ளமும் நடுங்கின. என்ன நடக்கப் போகிறதோ என்ற பயம் அவளது மென்மையான [redacted] நிற்கும் திராட்சைக் கொத்தை ஒரு அசன்ற இரும்புக் கரம் ஒரு சேரச் சேர்த்துப் பிழிவது போலிருந்தது அவளது இருதயத்தில் ஏற்பட்ட வேதனை. குளக்கரை யிலே விழுந்ததினுல் ஏற்பட்ட வலியை, அவள் நெஞ்சில் அப்போது எழுந்த வலி மஞ்சிற்று. எதையும் இழந்து விடலாம் ஒரு பெண்—ஆனால் மானத்தை இழந்து விடவும் துணிய முடியுமா? சூர்ப்பனகை மூக்கிழந்தாள் முலையிழந்தாள் என்ருலும் கற்பு நிலை யிழக்கவில்லை யென் பதினுல்தானே ராவணனின் தங்கை யென்ற பெருமையைப் பெற முடிகிறது! எதிரே இலக்குமணன் நிற்பது போலவே டைகரை அவள் சற்பனை செய்தாள். அவன முரட்டுக் கரங் களிலே சிக்கிக் கசங்கும் முல்லை மலராகத்தான் ஆகிவிடக் கூடாதே யென்ற கவலை அவளுக்கு மயக்கத்தை அதிகமாக்கிற்று. தனனையே நிதானப் படுத்திக் கொண்டான். எங் கேயோ ஒரு நீதி மன்றத்தில் ஒரு வக்கீல் வாதாடிஞராம்; கற்பழித்த வழக்கு ஒன்றில்!

குற்றவாளியின் சார்பில் வாதாடிய அவர், இறுதியாகத் தன் பேச்சை முடிக்கும்போது—"இந்தப் பெண் இவனுல் கற்பழிக்கப் பட்டதாகச் சொலலப்படுகிறது— இவளுக்கு இஷ்டமில்லாமலே அந்தக் காரியம் நடந்ததாகவும் விளக்கப்படுகிறது. ஒரு பெண் இறுதி வரையில் மறுத்துவிட்டால் அதையும் மீறி ஒரு ஆண் வெற்றியடைய முடியும் என்பது சாதாரண விஷயமல்ல! பலாத்காரம் நடைபெற்ற இடத்தில் இவளைக் கட்டிப் போடவுமில்லை! மயக்க முறவும் செய்யவில்லை. அப்படியிருந்தும் இவள் கற்பிழந்தாள் எனபது ஆச்சரியமே! இதோ இந்தத் தையல் ஊசியை நான் ஆட்டிக்கொண்டே யிருக்கிறேன் நீங்கள் இதிலே ஒரு நூலைக் கோர்த்துவிடுங்கள் பார்க்கலாம்!" என்று கூறி ஒரு ஊசியை எடுத்து மெதுவாக அசைத்துக் கொண்டே யிருந்தாராம், அதில் யாரும் நூலைக் கோர்த்திட முடியவில்லையாம்!

"இதைப் போலத்தான் பெண்ணின் மனம் பிடிவாதமாக மறுப்புக் காட்டி யிருந்தால், இந்த ஆண் வெற்றி பெற முடியாது. சிறிதளவாவது அவளும் உணர்ச்சி வசப்பட்டு விட்டாலேயே இவன் வெற்றி யடைந்திருக்கிருன். அதனுல் இருவருமே குற்றவாளிகள் தான்!' என்று குறிப்பிட்டாராம் அந்த வக்கீல்!

அதை எங்கேயோ யார் மூலமோ கேள்விப் பட்டாளோ; அல்லது படித்திருக்கிருளோ— அது நினைவில்லை! ஆனால் அந்தக் கட்டத்தில் அந்த வழக்கும, வக்கீலின் விளக்கமும் ஞாபகத் திற்கு வந்தன. ஆடிக் கொண்டிருககும் ஊசியாக மாறினுள். அலைமோதிக் கொண்டிருந்த டைகர் அவளது கைகளைப் பிடித்துக் கொண்டு, "கண்ணே! கண்ணே!!" என்று கெஞ்சினுன் அவள் கைகளைத் தட்டி விட்டு அப்பாற்போய் நின்று கொண்டாள்.

"டைகர்! இதுதான் நீ என்னைக் காப்பாற்ற வந்த அழகோ! மரியாதையாக இதை விட்டுப் போய்விடு!" என்று கத்தினுள். அவனுக்கு நம்பிக்கை குறைந்து விட்டது. அவளை மடக்கி விடலாம் என்ற எண்ணம் மூளியாகி விட்டது. ஆனுலும் ஒரு சபலம்; திருமணம் என்னமோ நிச்சய மாக நடந்து விடுமென்று! அதற்குள் இப்படி ஒரு குழப்பம் விளைவித்துக் காரியத்தைக் கெடுத்துக் கொள்ளக் கூடா தென்று முடிவு செய்து கொண் டான். அதனுல் அதற்கு மேல் அவளிடம் நெருங்கவில்லை.

"சரி; சிந்தாமணி! கல்யாணத்திற்கு முன்பு இப்படி யெல்லாம் நடந்து கொள்ளக்கூடா தென்று கருதுகிருய் போலும்! அந்தக் கர்நாடக வழக்கம் உனனை விட்டுப் போகவில்லை. பரவாயில்லை. உன்னை உன் இஷ்டப்படியே வீட்டில் கொண்டு போய் விடுகிறேன் வா!" என்று பேச்சின் முறையையே மாற்றினுன் டைகர்.

சிந்தாமணிக்கு உள்ளூரப் பயந்தான்! வீட்டுக்கு அழைத்துப் போவதாக எங்கு அழைத்துப் போய் விடுவாளே எனறு! அவள் பயப்படுகிருள் என்பதையும் அவன் புரிந்து கொண்டான்.

"எங்கேயாவது தந்திரமாக உன்னைக் கொண்டு போய் விடுவேனு என்று கலங்காதே! நான் உன்னுேடு வரப்போவதில்லை, இந்த மருத்துவ மனையின் வாசல் வரையிலே வந்து நான் உன்னை வழியனுப்பி வைக்கிறேன். அதற்குப் பிறகு நீயே உன் வீட்டிற்குப் போகலாம்." என அவன் கூறினுன்;

அது நல்ல யோசனை தான் என்று சிந்தாமணி கருதினுலும் வீடு வரையிலே நடந்து போகக் கூடிய அளவுக்கு உடல்நிலை இடந்தராதே யென்று யோசித்தாள், அதனுல் வீட்டுக்குச் செல்ல ஒரு வண்டி வேண்டுமென்று கேட்டாள் இதோ கொண்டு வருகிறேன் எனக் கீழே இறங்கிப் போய் ஒரு இரட்டை மாட்டு வண்டியைக் கொண்டு வந்து நிறுத்தினுன் சிந்தாமணி மாடிப் படிகளில் இறங்குவதற்கே கஷ்டப்பட்டு இறங்கி வந்தாள். அந்த சாக்கிலாவது அவளுக்கு உதவி புரிவதுபோல அவள் மேனியைத் தொடுவதற்கு அவன் துடித்தான்; அவளோ கைப்பிடிச் சுவற்றின் துணையோடு மெதுவாக இறங்கி கீழேவந்தாள். உயரக் கூண்டு வேய்ந்த இரட்டை மாட்டு வண்டி அதிலே ஒரே தாவாக தாவித்தான் ஏற முடியும், சிந்தாமணி சிறிது திகைத்தாள். டைகர் உதவி புரியத் தயாராக நின்று கொண்டிருந்தான் அவன் வண்டிக்காரனைப் பார்த்து, "ஏய், இதைக் கொண்டுபோய், அவுங்க வீட்டிலே விட்டு விடு! இந்தா வண்டிச் சத்தம்!" என்று எட்டணு பணத்தையும் நீட்டினுன். வண்டிக்காரன் வாங்கிக் கொண்டு, "உம்! புறப்படுங்கம்மா!" என்று துரிதப்படுத்தினன். சிந்தாமணி வண்டியில் ஏற வேண்டுமே! நல்ல உடம்புக்காரர்களுக்கே "ஹை ஜம்ப்" வித்தை தெரிந்திருக்க வேண்டும்; அந்த வணடியில் ஏற— அவளோ, உடலும் உள்ளமும் நலிந்து, உற்சாகமின்றி யிருக்கிருள்—அதனுல் சங்கடப்பட்டாள். பிறகு சமாளித்துக் கொண்டு அந்த வண்டியிலே குதிக்கும் தோரணையில் ஏறினுள். வெற்றி கிடடவில்லை அவளுககு! டைகருக்குத்தான் வெற்றி கிட்டியது! வண்டியின் தட்டிலே சிந்தாமணியின் இடுப்பு வரையிலே போய்விட்டது. கால்கள் கீழே தொங்கிக் கொண்டிருந்தன. கால்களை எடுத்து பூர்ணமாக அவளால் வண்டியில் அமர முடியவில்லை. கீழே குதிக்கவும் பயம்! நேரத்தை நன்கு பயன் படுத்திக் கொண்டான் டைகர்.

ஓடிப்போய் அவளை அப்படியே அள்ளி அணைத்து வண்டியின் மீது அமர்த்தினுன். சிந்தா மணிக்கு தனனை தூக்கித் தீக் குண்டத்திலே வீசி எறிந்தது போல இருந்தது. அந்தத் தீயினும் கொடுமையான வார்த்தைகள் எங்கிருந்தோ வந்து அவள் காதுகளைத் தாக்கின. "அடி வேசி! அடி விபச்சாரி!" என்ற சொற்கள்தான் அவைகள்! சிந்தாமணி காதுகளைப் பொத்தியவாறு, திரும்பிப் பார்த்தாள். சிவநேசர் ஆவேசமாக வண்டியை நோக்கி ஓடிவந்தார் "அப்பா!" எனறு வீறிட்டு அலறி வண்டிக்குள்ளேயிருந்து கீழே விழுந்தாள் சிந்தாமணி!

நீட்டோலை......

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

இதழுக்கு மறு இதழ் முரண்! முதல் வரிக்கு மறு வரி முரண்! ஆயினும் ஆரியங் காக்கும் அரண்; அதுவெனப் பாராட்டப் பெற்றது. கிரேக்கப் பெரியவன் சாக்ரடீசை சோக்ரத முனிவனாக்கி அவனது நீதி மன்றத்துச் சொற்போரை ஆரிய ரிஷி யொருவனின் ஆத்மீகக் கருத்தாக்கிக் குழப்பித் தந்தீர். பொறுத்துக் கொண்டது அறிவுலகம்! நாங்கள் எம்மினத்தான் இராவணனைத் தமிழன் என நிலைநாட்ட எப்பாடு படுகின்றோம்! எப்பக்கமிருந் தெல்லாம் தாக்குதல்! எரியுமிழும் கண்களோடு எதிர்க்கின்றார் துரோகக் கும்பல்! வலிந்து சாக்ரடீசை முனி புங்கவராக மாற்றுகிறீர்; வாழ்த்துப் பெறுகிறீர்—முடிகிறது உம்மால்; முழுப் பூசணியை சோற்றிலே ஒளிக்க!

கண்ணன் அவதாரம் எங்கள் கருப்புக் கண்ணாடிக்காரர் என்று மாம்பலம் மகிழ்கிறது. மயிலை களிக்கிறது. கல்கி சித்திர விளக்கம் தருகிறது.

சில காலமாக கல்கியிலே எழுதும் குட்டிக் கதைகளைப் படித்துப் பார்க்கிறேன். கதையின் தலைப்பிலே கண்ணன் அறிவுரையாற்றுவதுபோல ஓவியம் தீட்டி அதனருகே ராஜாஜி என்று குறிப்பிட்டு—தங்களையும் கண்ணை தாரமாக கற்பனை செய்திருக்கிற யுக்தியே யுக்தி!

கலியுகக் கண்ண பரமாத்மாவே!...தமிழர்களை யெல்லாம் குளத்திலே நீராடும் கோபிகைகளாக எண்ணி அவர்கள் மானத்தைப் பறித்திடும் தங்கள் நோக்கம் நாங்களறிவோம். காமராசர் மீது 'காளிங்க நர்த்தனம்' ஆடக் காலம் பார்த்திருக்கிற செய்தியும் தெரியும் எமக்கு! கழகக் 'கம்சன்'களை அழித்துவிட வேண்டுமென்று கனவு கண்டு உளருவதும் எங்கள் காதுகளிலே விழாமலில்லை! ஆத்திகம், ஆரியம் என்ற பாமா ருக்மணிகள் போதாமல்—அருகிருக்க அண்டை விட்டு ராதாவாம் அயல் நாட்டுக் கருத்துக்களையும் ஆலகால மாக்குகின்றீர்—அதையும் கவனிக்கிறோம். குலத்தைக் காப்பதற்கு கொலு வீற்றிருப்பதே சாலச் சிறந்ததென்று தட்சிணப் பிரதேசக் 'கோவர்த்தன கிரியை'த் தூக்கி நிறுத்த முயலுகின்றீர் சுப்பிரமணியமெனும் சுட்டு விரலின் துணை கொண்டு! அதையும் பார்க்கிறோம்; ஆலிலையாம் கல்கி அலுவலகத்தில் பள்ளி கொள்ளும் ஆச்சார்ய பாலகிருஷ்ணா? நீ, ஆரியம் செழிக்கப் பணிபுரியும் வேகத்தில் உளருவதெல்லாம் கீதை மொழி தானா?

அம்மவோ—புத்தரின் போதனையாமே உமது 'புன்மை நிறைச் சொற்கூட்டம்!

அன்பு வேண்டும்—உயிர்களைக் கொல்லாமை வேண்டும்-கொன்று தின்னாமை வேண்டுமென்ற கருத்தைச் சொல்ல வந்தீர் கல்கி ஏட்டில்! பாராட்டுகிறோம் அந்தக் கருத்தை!

"சாமியார் தோற்றார்" எனும் சிறு கதை மூலம் உயிர்களைக் கொன்று தின்னாமை வேண்டுமென்ற கருத்தை மட்டும் வலியுறுத்தியிருந்தால் நீர் ஆச்சாரியாராக இருக்க முடியதே—ஆரிய மத இரட்சகராக இருக்க முடியாதே—அதனால்தான் போலும் அந்தக் கதையிலும் கடவுளுக்கு "வக்கீலாக' மாறி வாதம் புரிகிறீர். கடவுள் என்ற சொல் காப்பாற்றப் பட்டால்தானே உழைக்காமல், ஊரை ஏமாற்றி வாழ்வதற்கான நிரந்தரத் திட்டம் காப்பாற்றப் படும். அதனால் ஆண்டவனை இழுத்து வந்து வாதாடும் அக்கறை பிறக்கிறது இயற்கையாகவே!

"புலி, காட்டிலுள்ள மிருகங்களைத் தின்னலாமா?" என்று சாமியார் கேட்கிறார்.

"மனிதர்கள் மட்டும் இறைச்சி சாப்பிடலாமா?" என்கிறது புலி.

தங்களின் சிறுகதையிலே இது ஒரு கட்டம். பரவாயில்லை: பாராட்ட வேண்டியதுதான்!

அடுத்து சாமியார் பதில் சொல்லுகிறார்:—

"மனிதர்கள் உங்களைப் போல மாமிசத்தைப் பச்சையாக சாப்பிடுவதில்லை. ஆடு கோழிகளை சமைத்துச் சாப்பிடுகிறார்கள்." என்று!

அதற்குப் புலியின் சார்பிலே நரி பதில் கூறுகிறது:—

"ஆண்டவன் செய்து வைத்திருக்கும் அமைப்பில் சாப்பிடக் கூடாத உணவை மனிதர்கள் சமைத்துச் சரிப்படுத்திச் சாப்பிடுகிறார்களே; அதுதான் பாபம்! ஆண்டவன் உத்திரவுக்கு விரோதம். ஜீரணம் செய்து கொள்கிற சக்தி இருக்கிற புலியும் சிறுத்தையும் மிருகங்களைச் சாப்பிடுவதில் பாபமில்லை. இயற்கைக்கு விரோதமாக நெருப்பையும் தண்ணீரையும் உபயோகித்து மாமிசத்தை மிருதுவாக்கித் தின்பதுதான் பாபம்" என்று!

இப்படித் தங்கள் கதையில் நரி உபதேசம் செய்கிறது. அதாவது தாங்கள் அறிவுரை வழங்குகிறீர்கள். அதோடு ஆண்டவன் மீது குற்றமில்லை; அவர் மனிதர்களுக்காக மாமிச உணவைப் படைக்கவில்லை: அப்படிப் படைத்திருந்தால் பச்சை மாமிசம் ஜீரணமாகிற சக்தியை மனிதக் குடலில் படைத்திருப்பார்—அப்படிப் படைக்காததிலிருந்தே— ஆண்டவன், மனிதர்கள் மிருகங்களைக் கொன்று தின்னக்கூடாது என்று விரும்புகிறார் என்ற எண்ணத்தை வலியுறுத்துகிறீர்கள்.

மனிதன் தோன்றி, மனித நாகரீகம் தோன்றாத காலத்திலே பச்சை மாமிசங்களையே அவன் தின்று வாழ்ந்தான் என்ற உலக வரலாற்றை மறந்தீர் போலும்! சக்கி முக்கிக் கற்கள் கண்டு பிடிக்கப்படாத காலத்திற்கு முன்பு, நெருப்பு என்ற ஒன்றை மனிதன் காணாத காலத்தில் மிருகங்களைக் கொன்று, ஏன்; மனிதர்களையே கொன்று பச்சை மாமிசம் சாப்பிட்டதாக பழைய வரலாறுகள் கூறுகின்றனவே; அப்போது மட்டும் பகவான், மனிதனுக்கு ஜீரண சக்தியை அளித்து மிருகங்களைக் கொன்று தின்பது பாவமில்லையென்று சட்டம் பிறப்பித்திருந்தானா?

மனிதனுக்கு பச்சைக் கறி சாப்பிட்டால் ஜீரணமாகாது. அது கடவுள் கட்டளை. புலி, சிங்கம், முதலிய மிருகங்கள் ஜீரணசக்தியுடையவை—அதனால் அவை மற்ற மிருகங்களைக் கொல்லலாம்! இதுவும் கடவுள் கட்டளை!

அந்தக் கடவுளுக்கு புலியிடமும் சிங்கம் சிறுத்தைகளிடமும் ஏற்பட்ட இரக்கம் புள்ளி மானிடமும், வெள்ளாட்டினிடமும், ஏனைய சிறு மிருகங்களிடமும் ஏற்படாமற் போன காரணந்தான் என்ன?

புலிக்கும், சிங்கத்திற்கும் பச்சை மாமிசம் ஜீரணமாகாத அளவுக்கு சக்தி குறைந்த குடலமைப்பைச் செய்திருந்தால் என்ன முழுகிவிடும் அந்த ஆண்டவனுக்கு! மனிதனாவது பச்சை மாமிசத்தை சமைத்துப் பக்குவப் படுத்த பகுத்தறிவைப் பெற்றிருக்கிறான்,

புலி, சிங்கம் முதலிய பயங்கர மிருகங்கள் அந்த அறிவு பெற்றவை அல்லவே. அதனால் நிச்சயமாக பச்சை மாமிசத்தை ஜீரணிப்பதற்காக சமைத்துச் சாப்பிட கனவிலும் நினைக்க முடியாதே அவைகள்!

ஆச்சாரியாரே! தங்கள் வாதத் திறமையால் ஆண்டவன் காப்பாற்றப்படவில்லை. அதற்குப் பதிலாக மேலும் அதிகமாக குற்றம் சுமத்தப்படுகிறான். பச்சை மாமிசத்தை ஜீரணிக்க இயலாத அமைப்பை மனிதனுக்கு மட்டும் படைத்தவன், புலி சிங்கத்திற்கும் படைக்காதது ஏன்? இதற்கு என்ன பதில் ஆச்சாரியாரே! என்ன பதில்?

ஜீவகாருண்யத்தை மனிதனுக்கு எடுத்துச் சொல்லும்—ஆனால் அதே நேரத்தில் அந்தத் திரை மறைவில் தெய்வத்திற்குப் பாதுகாப்புத் தேடி வீணாக சிக்கிக் கொள்ளாதீர் என்றுதான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மனிதன், பச்சையாக சாப்பிட முடியாத தெல்லாம் ஆண்டவன் அனுமதிக்காத உணவுப் பொருள் என்று அர்த்தமா?

அப்படியானால், பாகற்காயை மனிதன் பச்சையாக சாப்பிட முடியவில்லை, சமைத்தே உண்ண முடிகிறது. அதனால் பாகற்காய்—ஆண்டவனால் தடை விதிக்கப் பட்ட பொருளா? முருங்கைக் காய்—பச்சையாக விழுங்கக் கூடிய ஆகாரமா? புடலங்காய்! பரங்கிக்காய்! பார்ப்பனரின் வயிறு போலுள்ள பூசணிக்காய்! கத்தி போல் கூர்மையுள்ள பீர்க்கங்காய்! இவையெல்லாம் பச்சையாக உண்ணக்கூடிய ஆகாரமா ஆச்சாரியாரே!

பல்லுப் போயிற்று; பதவி போயிற்று; பவிஷு போயிற்று— உண்மை! உமது பரந்த சாப்பாட்டு அனுபவங்களுமா பறி போயிற்று! ஆகா! உமது பரம்பரைக்கே இழுக்கு!

"சாமியார் தோற்றார்" என்பது உமது சிறுகதையின் தலைப்பு!

"சாணக்கியர் தோற்றார்" என்பதே உமது பெருங் கதையின் தலைப்பாக இருக்கும்—

அப்படித்தான் இருக்க முடியும்!

ஆத்தீகத்தைப் பரப்புவதிலே "சாணக்கியர் தோற்றார்!"—

அரசு கட்டில் ஏறும் முயற்சியிலே சாணக்கியர் தோற்றார்!

நமது விடுதலை உணர்வை அழிக்கும் திட்டத்திலே சாணக்கியர் தோற்றார்!

நமது சமுதாயப் புரட்சிக்கு முன்னே சாணக்கியர் தோற்றார்!

சரிந்து வரும் சாஸ்திர சம்பிரதாயம், ஆரிய ஜாதி அனுசாரம் ஆகியவற்றைக் காப்பாற்றுவதிலே பரிபூரணமாகச் சாணக்கியர் தோற்றார்—என்றே சரித்திரம் எழுதப்படும்! சல்லடம் கட்டிப் பயனில்லை—சிறுகதை, பெருங் கதை, சிந்தனைக்கு ஒவ்வாத கதை எழுதிப் பயனில்லை! வரிக்கு வரி மறுப்புத்தர—வாதத்தில் வெல்ல அறிவியக்கம்—அரசியல் இயக்கம் எனப்படும் தி. மு. கழகம் எப்போதும் தயாராக இருக்கிறது!

அறிவீர் இதனை [illegible]ம்பலத்து முனிவரே!

அன்புள்ள,

விடுதலை வீரன்.

மே 6ல் நடைபெற்ற சென்னை நகராண்மைக் கழக நூற்றாண்டு விழாவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் 29வது வட்ட எம். சி. யும் நமது கிளைக்கழக செயலாளருமான தோழர். அ. பொ. அரசு அவர்கள் வெற்றி வீரர் என்ற பட்டம் பெற்ற போது திருமதி ராமநாத அய்யர் (மேயர்) உலாவரும் வெண் பொற் கலம் பரிசாக வழங்கும் காட்சி.

பூசனை செலுத்தும் பண்டிதர்!

வெள்ளாடும் வரிப் புலியும் ஒரே துறையில் தண்ணீர் குடிக்குமாம்!—இது ராம ராஜ்யத்தில்!

அந்த ராம்ராஜ்ய விநோதத்தை நாலணா டிக்கெட் செலவில் நாம் சர்க்கஸ் கம்பெனிக் காட்சியிலே கண்டு களிக்கிறோம்!

ஆனால் இன்னொரு சர்க்கஸ் —உலக ரீதியிலே துவங்கப்பட்ட சர்க்கஸ்—தன்னுடைய சமீபத்திய காட்சியை சென்ற கிழமை லண்டனிலே காட்டிற்று!

ஆமாம்; காமன்வெல்த் மாநாடு என்று பெயர் அந்த சர்க்கசுக்கு!

புலியும் புள்ளி மானும் ஒரே துறையில் நீர் பருகுவதைப் போல—ஓநாயும் வெள்ளாட்டுக் குட்டியும் ஒரு நிமிஷ நேரம் சேர்ந்து நிற்பதைப் போல வேறுபட்ட தத்துவங்களை; முரண்பட்ட கொள்கைகளை அமுலாக்கி வரும் நாடுகளின் பிரதமர்கள் அந்த மாநாட்டிலே கலந்து கொண்டார்கள்; கைலாகு கொடுத்துக் கொண்டார்கள்; சேர்ந்து உட்கார்ந்து புகைப் படமும் எடுத்துக் கொண்டார்கள்!

இந்த ஒன்பது நாடுகளிலே வேங்கையைப் போல் கொடுமை நிறை எண்ணம் கொண்டவை பல!

வெள்ளாட்டைப் போல் பலவீனத்தை மட்டுமே சொந்தமாகக் கொண்ட நாடுகளும் இருக்கின்றன, அங்கே!

இதில்தான் இந்தியாவும் ஒரு அங்கத்தினர்!

கறுப்பனா? அவனை விரட்டி அடி! கூண்டோடு கொளுத்து—என்று கொக்கரிக்கும் தென்னாப்பிரிக்காவோடு கறுப்பரின் உரிமைக்காகவே உயிரைப் பயணம் வைத்துப் போராடிய காந்தியின் சீடர் நேருவும் சேர்ந்து, அமர்ந்து, பேசினார்—

அந்தக் கறுப்பரின் வருங் காலத்தைக் கணிக்கவா? அல்ல; அதைத் தவிர்த்த மற்ற பிரச்னைகளை அலசிப் பார்ப்பதற்காக!

இந்தியாவின் வடகோடியிலிருப்பதாம்; உல்லாசச் சோலையாம்—காஷ்மீரமென்னும் அந்த உலகத்தின் கூரை நேருவின் தலையில் இடித்துக்கொண்டிருக்கிறதல்லவா? அதில் ஒரு 'கட்சிக்காரரான' பாகிஸ்தான் பிரதமரும் வந்திருந்தார்; நேருவும் அவரைச் சந்தித்தார்—ஆனால் காஷ்மீர்ப் பிரச்னையைப் பேசினார்களா? இல்லை; ஒரு வார்த்தைகூட அதைப் பற்றி இருவரும் வாய் திறக்கவில்லை!

தமிழனா? அவனைக் கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளு!—கர்ஜனை புரிகிறது, சிங்களம்! அதன் பிரதமர் பண்டார நாயகாவை அழைத்து, நேருவையும் அழைத்து, இருவருக்குமான சமரசத் திட்டங்களைத் தீட்டியதா, காமன்வெல்த் மாநாடு? இல்லை.

கறுப்பர்களுக்கு விதிக்கப்படும் கொடுமைக்கு மாற்று சொல்லப்படவில்லை; காஷ்மீர் சிக்கல் அவிழ்க்கப்படுவதற்கான வழி சொல்லப்படவில்லை; இலங்கை இந்தியர் பிரச்னைக்கு தக்கதோர் பாதை காட்டப்படவில்லை.

—பின்னர் எதுக்கு இந்த காமன்வெல்த் உறவு?

—நாடெங்கிலும் இந்தக் கேள்வி இப்போது முன்னிலும் வேகமாக உரத்த குரலில் கேட்கப்படுகிறது.

பிரிட்டனின் பிரதமர் ஆண்டனி ஈடனைப் பூசாரியாகக் கொண்டு, ஆங்கில ஏகாதிபத்தியமென்னும் உருவச் சிலைக்கு பழைய அடிமை நிலையிலேயே ஏன் இன்னும் வழிபாடுகள் இயற்றப்பட வேண்டும்?

—ஆட்சிபீடமேறிகள் இந்தக் கேள்விகளுக் கெல்லாம் பதில் சொல்ல வேண்டியவர்களாயிருக்கிறார்கள்!

சிங்கப்பூரிலே விடுதலை என்று வாய் திறந்து கேட்ட மக்களின் குரல்வளையை நெறித்துக் கொடுமை புரிகிறார்கள்!

சைப்ரஸ் தீவுகளிலே விடுதலை ஜ்வாலையில் குளிர் நீரை ஊற்றி அணைக்க முயல்கிறார்கள்!

அந்த ஏகாதிபத்ய பீடத்துக்கு ஜனவரி—26-ல் பூரண சுதந்தரம் பெற்றவர்கள் ஏன் பூரண கும்பம் தூக்கிச் செல்ல வேண்டும்?

பண்டிதரின் வெளி நாட்டுக் கொள்கைக்கு 'ஜே' போடுபவர்கள் இதுபற்றி தங்கள் சிந்தனையைத் திருப்பட்டும்!

★



THE BEST POSTAL TUTORIAL COLLEGE TIRUCHI

அஞ்சல் மூலம் கல்விப் பயிற்சி

'பி' பிரிவு வகுப்பு துவக்க நாள்

10-7-56

1957 மார்ச்சு, ஏப்ரல் தேர்வுகளுக்கும், 1956 அக்டோபர், செப்டம்பர் தேர்வுகளுக்கும் பாடங்கள் அனுப்பப்படும் வகுப்புகள்.

1. அடிப்படை ஆங்கிலம்
2. இ. எஸ். எல் சி,
3. எஸ். எஸ். எல். சி.
4. மெட்ரிகுலேசன் (சென்னை.)
5. இண்டர் (சென்னை) (முதல்இரண்டு பாகங்கள்மட்டும்)
6. புகு முகத் தேர்வு
7. புக் கீப்பிங்
8. ஹோமியோபதி
9. கைத்தறி நெசவு
10. விவசாயம்

2 ஒரு அணா ஸ்டாம்புகளுடன் உடனே விண்ணப்பியுங்கள்

எ. ராதாகிருஷ்ணன் (நிர்வாகி)

அஞ்சல் முறைக் கல்விப் பயிற்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-2.

கிளைக் கழகச் செயலாளர்களே—உங்கள் ஊரிலுள்ள கழகத் தோழர்கள், தங்களை வாக்காளர் பட்டியலில் பதிவு செய்துகொண்டார்களா—இல்லையெனில், உடனடியாக ஆவன செய்ய வேண்டுகிறோம்.

—தலைமைக் கழகம்.



அம்மாபேட்டை

8-7-56 ஞாயிறு மாலை 5-மணிக்கு நடைபெறும் தி. மு. க. 7-வது ஆண்டு விழாவில், தோழர்கள் மு. கருணாநிதி, எம். எஸ். மணி ஆகியோர் பேசுவர்.

செங்கற்பட்டு

8-7-56 ஞாயிறு காலை 9-மணிக்கு செங்கற்பட்டு கணபதி டாக்கிசில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் பேசுவார்.

நன்கொடை அணா 4

சென்னை

9-7-56 திங்கள் மாலை 6-மணிக்கு ஆள்வார்பேட்டையில் தோழர் இரா. அகமழகன் அவர்கள் தலைமையில், தோழர்கள் ஈ.வே. கி. சம்பத், கவிஞர் கண்ணதாசன் பேசுவர்.

கருணாநிதி நிகழ்ச்சிகள்.

ஜூலை- 8 அம்மாபேட்டை (தஞ்சை)
,, 15 சென்னை-கடற்கரை பொதுக்கூட்டம்
,, 16 கல்லக்குடி
,, 22 சென்னை-மீர்சாகிப் பேட்டை
,, 26 ஸ்ரீவைகுண்டம்
,, 27 முக்கூடல்
,, 28 ஓய்வு
,, 29 ராசபாளையம்
,, 30 சங்கரன்கோயில்

ஜூலை, 26-ம் தேதிக்குப் பிந்திய நிகழ்ச்சிகளில், மதுரை மாவட்டச் செயலாளர் தோழர் எஸ். முத்து அவர்களும் கலந்து கொள்வார்கள்.

[ஜூலையில் வேறு நாட்கள் ஓய்வில்லை. ஆகஸ்டில், திருச்சி, ராமநாதபுரம் மாவட்ட சுற்றுப் பயணம். வேறு ஊர்களில் கலந்துகொள்ள இயலாது.]

திருமணம்

தஞ்சை மாவட்டம் வானராங்குடி திரு பெரியசாமி அவர்களின் செல்வன் கனகராசனுக்கும், இளங்காடு திரு தங்கப்பா அவர்களின் செல்வி மீனசுந்தரிக்கும் 18-6-56 அன்று சிறப்புரத் திருமணம் நடைபெற்றது. ரூபாய் ஒன்று நன்கொடை வரப்பெற்றோம்!

தியாகராயா பைன் ஆர்ட்ஸ் அகெடமி

வண்ணையம்பதி, சென்னை-21.

8-7-56 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு

தியாகராயா கலா மண்டபத்தில்

இலட்சிய நடிகர்

எஸ். எஸ். ராஜேந்திரன்

குழுவினர் அளிக்கும்

புது வெள்ளம்

கட்டணம் :— ரூ. 5, 3, 2, 1, அணா 8.

வி. சி. ஸ்ரீராமுலு செட்டியார் — தலைவர்

ஆர். எல். லிங்கம், எஸ். எம். ராமன் பி.எ.(ஆனஸ்) — செயலாளர்கள்.

டிக்கட்டுகள் கிடைக்குமிடம்:— எ. கெ. சாமி அண்டு சன்ஸ், டி. எச். ரோடு, எ. ஜி. ஸ்டோர்ஸ் டி. எச். ரோடு. தியாகராயர் கல்லூரி டி. எச். ரோடு, கிங் அன் கம்பெனி சைனாபஜார்.

நாஞ்சில் மாவட்ட தி. மு. க. பொதுக் குழு

"6—7—1956 மாலை 4-மணிக்கு வடசேரி தி. மு. க. அலுவலகத்தில், நாஞ்சில் மாவட்ட தி.மு.கழகப் பொதுக் குழு நடைபெறும். அதுபோது, 'மணிமகுடம்', 'புது வெள்ளம்' நாடகங்களின் வரவு—செலவும், 4—11—1955-லிருந்து 6-7-1956 வரையுள்ள நா. மா. தி. மு. க. வரவு-செலவு இனங்களும் பரிசிலனை செய்யப்படும்." என்று நாஞ்சில் மாவட்ட தி. மு. க. செயலாளர் வி. எம். ஜான் அவர்கள் அறிவிக்கிறார்.

★

கழகத் தோழர்களுக்கு

தோழர் ஆசைத் தம்பியின் அறிவிப்பு. அவர்களுக்கு கடிதம் எழுத விரும்புவோர், கீழ்க் கண்ட ஏதாவது ஒரு முகவரிக்கு எழுதவும்.

ஏ. வி. பி. ஆசைத் தம்பி
தனி அரசு
131. பிராட்வே, சென்னை—1.

(அல்லது)

ஏ. வி. பி. ஆசைத் தம்பி
'சம்பத் நிலையம்'
4. பி. பி. ரோடு.
திருவல்லிக்கேணி, சென்னை—5.

பிறைவானம்...

★ 11-ம் பக்கத் தொடர்ச்சி

நீருக்கடியில் சாவைத்தேடி ஓடுகிறாய்..."

"ஐயையோ! நிறுத்து; நிறுத்து; போதும் நிறுத்து!"

"உன் கண்கள் இருண்டு விடுகின்றன...'வா மகனே, வா!' என்று விஷக்கரம் நீட்டி—கோரப் பற்களைக் காட்டி அழைக்கிறது மரணம்! அப்போது உன் மனக் கண் முன்னே மகனைப் பிரிந்து வாடும் அப்பா—'ஐயோ' என்று புலம்பித் தவிக்கும் அம்மா..."

"என்னை வதைக்காதே. நிறுத்தி விடேன் நான் சாவதா ? ஐயோ!"

"அப்போது இரண்டு கரங்கள் உன்னைக் கட்டி அணைக்கின்றன."

"ஆ...!"

"ஆமாம்; அணைத்துத் தூக்குகின்றன! கழலிலிருந்து உன்னை இழுக்கின்றன! ஆனால் நீ மூர்ச்சையிழக்கிறாய்! மீண்டும் நீ கண் விழிக்கிறாய்; மாண்டு மீண்ட நீ விழித்துப் பார்க்கிறாய்! அப்போது உன்னைக் காப்பாற்றிய இரண்டு கரங்களுக்குச் சொந்தமான உருவத்தையும் பார்க்கிறாய்! அப்போது நீ என்ன செய்வாய் ?"

"என்ன செய்வேனா? அப்படியே பாய்ந்து அந்த உருவத்தைக் கட்டிப் பிடித்து...இல்லை; கையெடுத்து கும்பிட்டு...இல்லை; இல்லை; காலில் விழுந்து தொழுவேன்!"

"அந்த உருவம் சம்பானாக இருந்து விட்டால்... ?"

"என்ன?"

"ஆமாம், சம்பானாக இருந்து விட்டால்...அவன் செய்த உதவியை உதறி விடுவாயா? ஆற்றில் விழுந்து மீண்டும் சுழலிலேயே சிக்கி விடுவாயா? அல்லது 'ஏனடா என்னைத் தொட்டாய்?' என்று அடித்து நொறுக்குவாயா?"

" ... ... "

"சொல்: என்ன செய்வாய்? அடடே இதென்ன விம்மல்?... தம்பீ, தம்பீ! ஏன் அழுகிறாய்?"

"..............."

"ஆ! எங்கே ஓடுகிறாய்? பெட்டியை ஏன் திறக்கிறாய்? அடடே! ஏன் உன் மாமா வாங்கித் தந்த 'சில்க் புஷ்கோட்'டை எடுக்கிறாய்? எங்கே ஓடப் பார்க்கிறாய்? தம்பீ...! நில்...நில்...நில்..."

"இல்லை: நிற்க மாட்டேன்! நான் சேரிக்குப் போகிறேன். சம்பானைப் பார்க்கப் போகிறேன் அவனிடம் மன்னிப்பு கேட்கப் போகிறேன். இந்த 'புஷ் கோட்'டை அவனுக்கே தந்து விடப் போகிறேன் ... தடுக்காதே என்னை! நான் போகிறேன்..."

"ஹா...ஹா...ஹா!"

"ஏன் சிரிக்கிறாய்? ஆமாம்; நீ யார்? ... யார் நீ?...சொல்! சொல் !!..."

"சொல்லுகிறேன் தம்பீ! நான் தான் உலகம் தூங்கினாலும், உறங்காது விழித்திருக்கும் — கையிலே துலாக்கோல் பிடித்து நிற்கும் — நீதி!"

—சொர்ணம்.

சென்னை 27-வது வட்ட தி. மு. க. தோழர்களுக்கு

26-6-56 முதல் சென்னை, 27-வது வட்டம், பிள்ளையார்கோயில் தெரு, எண்-15 இல்லத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் 27-வது வட்டக் கிளையின் பணிமனை அமைக்கப்பட்டுள்ளது.

இப்போதுதான் தெரிகிறதாம்!

"சோஷலிஸம் சமத்துவ அடிப்படையைக் கொண்ட ஒரு தத்துவமாகும். தேர்தலிலோ அல்லது நிடமனத்திலோ சமநிதி ஒன்று மட்டுமே முக்கியமானதாகக் கருதப்பட்டால் 5000 ஆண்டு கால வழக்கத்தில் வந்த அறிவுத் திறமையும் கொண்ட உயர் ஜாதிக்காரர்களை (பார்ப்பனர்களைப் போன்றவர்களை) யாரும் தோற்கடிக்க முடியவே முடியாது. ஒரு சோஷலிஸ்ட் சமூகத்திலும் கூட அவர்களே உச்சாணிக் கொம்பில் வீற்றிருப்பார்கள்.

கீழ் ஜாதிக்காரர்களுக்கும், பார்ப்பனர்களுக்கும் இடையே சமத்துவம் நிலவச்செய்ய வேண்டுமென்றால்— பார்ப்பனர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டே யாகவேண்டும். இந்த அநீதி தற்காலிகமாக வேண்டுமானால் இருக்கலாம். ஆனால் பல ஆயிரக்கணக்கான வருடங்களாக 'சூத்திரர்களுக்கு' இழைக்கப்பட்டிருக்கும் அநீதியை ஒழிப்பதற்கு மேற்கண்ட தற்காலிக அநீதி பயன்படும்: மேலும் நீதியும், சமத்துவமும் நிலவுகிற புது சகாப்தம் உதயமாகும்."

—டாக்டர் லோகியோ

(அகில இந்திய காரியாலயத்திற்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையின் ஒரு பகுதி)

சென்னை நகர மாணவர்களுக்கு

நடைமுறையாண்டில் சென்னை நகர தி. மு. க. மாணவர் கிளையை நல்ல முறையில் இயங்குவதற்காக ஆலோசனைக் கூட்டம் ஒன்று சென்னை, இராயபுரம், அறிவகத்தில் 8—7—56 ஞாயிறு காலை 9 மணியளவில் நடைபெற இருக்கிறது.

சென்னை நகர தி. மு. க. மாணவர் கிளையின் பணியில் அக்கறை கொண்டோர்—அன்பு கொண்டோர் அத்தனை மாணவரையும் 8—7—56 காலை 9 மணிக்கு அறிவகத்திற்கு வருகை தருமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றேன.

சென்னை நகரிலுள்ள அமைப்புக் குழு உறுப்பினர்கள், சென்னை நகரைச் சார்ந்த கழக நிர்வாகிகள் ஆகியவர்களை தவறாமல் கலந்துகொள்ளப் பணிவுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அன்பன்,
டி. கே. பொன்னுவேலு,
அமைப்பாளன்,
தி. மு. க. மாநில மாணவக் கிளை.

3—7—56
'அறிவகம்'
சென்னை-13.

நீதி!

"தம்பீ..."

"..............."

"தம்பீ!...தம்பீ!..."

"யாரது?..."

"உன்னைத்தான்! அழைப்பது காதில் விழவில்லையா?..."

"விழுகிறது; நன்ருக விழுகிறது! ஆனல் யார் என்னை அழைப்பது? ஏன் அழைக்கவேண்டும்!..."

"ஐயோ, தம்பி! ஏன் இப்படி பயப்படுகிருய்? ஏன் இப்படி உன் கால்களும் கைகளும் நடுங்குகின்றன?..."

"நடுக்கமா? எனக்கா? யார் சொன்னது? உன் கண்களென்ன குருடா? அல்லது நீயென்ன பைத்தியமா?..."

"தம்பீ! உன்னையே நீ ஏன் ஏமாற்றிக் கொள்கிருய்? நான் குருடல்ல; கண்களை விழித்து, அகல விரித்து உலகத்தினமேல் பார்வையை செலுத்திக்கொண்டுதான் இருக்கிறேன். திரைமறைவிலே தீங்கு புரிவோரைப் பார்க்கிறேன்; பாதிக்கப்பட்ட நெஞ்சம் குமுறி அழுவதையும் கேட்கிறேன். நான் குருடேயல்ல; ஆனல் என கண்களைக் கட்டிவிட்டதாகத்தான் சிலர் மனப்பால் குடிக்கிருர்கள், பைத்தியக்காரர்கள்! அதிருக்கட்டும்...அதோ, உன் முகம் 'குப்'பென்று கருப்படைந்து விட்டதே—உன அகத்தில் அடைந்து கிடக்கும் 'கருமை'யின் பிரதி பலிப்புதான அது?..."

"யார் நீ? என்ன பேசுகிருய்?"

"ஐயோ, ஏன் தம்பி இப்படி குறுக்கும் நெடுக்குமாக நடக்கிருய்? புரிகிறது; புரிகிறது; தவறு செய்த நெஞ்சுதான் இப்படித் தடுமாறும்; தத்தளிக்கும்; தவித்துக் குமுறும்!..."

"தவரு? நான் தவறுசெய்தேன? நல்ல கதை! நான இன்று செய்த மகத்தான செயல் உனக்குத் தெரியாதா?..."

"மகத்தான செயலா? இருக்காது! அப்படியென்ருல் நீ இப்போது நிம்மதியாக அல்லவா தூங்கிக்கொண்டிருப்பாய்!"

"நம்பவில்லையா நீ? இதோ, என் கைகளைக் கேள்; அது சொல்லும்—அந்தக் கைபிடிதத கம்பைக் கேள்; அது சொல்லும்—அந்தக் கம்பு செய்த கடமையைக் கேள்; இதோ, நான் சொல்லுகிறேன்!"

"கடமையா? கடமையாற்றிய நெஞ்சமா உன்னுடையது? இருக்க முடியாதே தம்பி..."

"நம்பிக்கையற்ற ஜீவனே! சக்கை சக்கையாகப் பிய்ந்து—உருமாறிவிட்ட கம்பைப் பார்; அதிலே கண்ணுக்குத் தெரியாமல் ஒட்டிக் கொண்டிருக்கும் இரத்தக் கரையைப் பார்..."

"இரத்தக் கரையா? எதை அடித்தாய் தம்பி? காட்டுப் புலியையா?"

"புலிகூட மனிதனுக்கு உதவுமே! அதைக் கூண்டிலே அடைத்துவைத்து — 'சர்க்கஸ்' வித்தை காட்ட -கோடீஸ்வரர்களானவர்களை உனக்குத் தெரியாதா?"

"அப்படியானல் விஷ நாகம் எதையும் கொன்ருயா?"

"நீ ஒன்று; நாகம் கடவுளாயிற்றே; எங்கள் கொல்லையில் இருக்கும் நாகத்திற்கு பால் ஊற்றி வருகிருர்களே என் அம்மா! பாம்பிடம் ரத்தினம் இருக்குமாம்; அது லட்சக் கணக்கான ருபாய்கள் பொறுமாமே; அடிப்பேன அதை? அடித்தால்தான் 'பாவம்' விடுமா?..."

"பின்...புலியையும் பாம்பையும்விட உனக்குப் பயங்கரமாகத் தோன்றியது எது தம்பி?..."

"சொல்லுகிறேன். என் அப்பாவின் பண்ணை நிலம் இருக்கிறதே — அந்தப் பரந்துகிடக்கும் வயல் வெளியின் ஒரு கோடியில் சேரி ஒன்று இருக்கிறதே—தெரியுமா உனக்கு? அந்தச் சேரியிலே சம்பான் என்ெருரு சிறுவன் இருக்கிருனே...அவனைத்தான் அடித்தேன்...!"

"ஐயையோ! இது என்ன கோரம்! செய்யலாமா அப்படி?"

"ஏன் திகைக்கிருய்? அவன் செய்தது உனக்குத் தெரியாது!"

"என்ன செய்தான்? சொல் தம்பி சீக்கிரம்?..."

"என்னைத் தொட்டுவிட்டான்"

"என்ன? தொட்டது குற்றமா?"

"குற்றமில்லாமல் குணம் கொண்ட செயலா? அவன் பறையன்—கீழ்ச்சாதி—தீண்டக் கூடாதவன் — நாங்கள் வீசி எறியும் பிச்சைக் காசைக் கொண்டு பிழைப்பவன்-என் அடிமை — அவன் தொடலாமா? சொல், தொடலாமா என்னை? அதுவும் எப்படி?...ஊரிலிருந்து வந்திருக்கிருரே என் மாமா — கலெக்டர் மாமாவைத்தான் சொல்லுகிறேன்—அவர் வாங்கிவந்த 'சில்க் புஷ்கோட்'டைப் போட்டுக் கொண்டு காற்று வாங்க வயல் வெளிக்குப் போனேன. சம்பான் வந்தான். பார்த்தான்; பார்த்தான்; கண்கள் மங்கப் பார்த்தான். எனக்குப் பிடிக்கவேயில்லை. 'சீ, நாயே! போ அந்தப்புரம்!' என்றேன். அவன் உடனே 'ஹா... ஹா...! இது எம்மாஞ் ஜோரா யிருக்கு சின்ன எசமான!' என்று சொல்லிக்கொண்டே தொட்டு விட்டான். விடுவேன நான? அடித்தேன்; அடித்தேன்; 'ஐயோ' என்று அலறித் துடிக்குமளவுக்கு—நம்பே வளைந்து ஒடியும் அளவுக்கு அடித்தேன். பயல் அழுது கொண்டே ஓடிவிட்டான், பிச்சைக்கார பயல்...நான் செய்தது தப்பா, சொல் இப்போது..."

"............"

"ஏன் பேசாமல் இருக்கிருய்? ஏன் உன் குரல் எழும்பவில்லை?"

"எழும்பாது தம்பி, உன்னைப் போல கோணல் புத்தி படைத்தவர்களின் காட்டுக் கூச்சலுக்கு முன் எழும்பவே எழும்பாது!..."

"கோணல் புத்தியா? எனக்கா?"

'தம்பீ' காக்கைகளைப் பார்த்திருக்கிருயா நீ?"

"பார்த்திருக்கிறேன்...ஒரு முறை ஒரு காகத்தை வலைவைத்துப் பிடித்தும் இருக்கிறேன்..."

"அப்போது எங்கிருந்தெல்லாமோ ஒரு காக்கைக் கூட்டமே வந்து சேர்ந்து, உரக்கக் கத்துமே, கேட்டிருக்கிருயா?..."

"கேட்டிருக்கிறேன் — ஆச்சரியப்பட்டுமிருக்கிறேன்!..."

"...ம்...நான் என்ன சொல்வது? உனக்கு நீந்தத் தெரியுமா?"

"தெரியாது! ஆனல் ஆற்றிலே குளிப்ப தென்ருல் எனக்கு கொள்ளை மகிழ்ச்சி. அதுவும் வெள்ளம் பாயும் நேரத்தில்... அடடா!"

"தம்பீ! அப்படி ஒரு நாள் நீ ஆற்றின கரையில் குளித்துக் கொண்டிருக்கிருய்; அப்போது தண்ணீர் வேகத்தில் கால்தவறி விழுந்து விடுகிருய்; பயங்கரமான வெள்ளத்தில் சிக்கிக் கொள்கிருய்..."

"என்ன? என்ன?"

"கேள்! நீரின் வேகம் உன்னை அடித்துக் கொண்டு போகிறது! நீ கதறுகிருய்; 'அம்மா; அம்மா' என்று அலறுகிருய். கரையிலே உன் அம்மா நின்று கொண்டு 'ஐயோ, மகனே!' என்று துடிக்கிருர்..."

"ஐயையோ! இதெல்லாம் என்ன?"

"நடு ஆற்றுக்கு நீ போய் விடுகிருய்! 'சோ' என்ற ஆற்று அலைகளின் உறுமல் பயங்கரமாகக் கேட்கிறது; நுரை தப்பும் வெள்ளம் உன்னை பூமியை நோக்கி இழுக்கிறது. நீ கத்துகிருய்; குரல் எழும்பக் காணேம், இன்னும் போகிருய்...பக்கத்தில் உன் உயிர் குடிக்கக் காத்திருககிறது ஒரு பயங்கரமான சுழல்!"

"ஆ...!"

"ஆம்; சுழலில்தான் நீ சிக்கிக் கொண்டு விட்டாய்! உங்கள் ஊர் பெரிய தேரை பனிரெண்டாயிரம் ஏழைக் கூலிகள் இழுப்பார்களாமே, அதைப்போல கோடிக் கணக்கான இரும்புக் கரங்கள் உன் கால்களைப் பிடித்து இழுக்கின்றன. நீ துடிக்கிருய்; 'மொடக் மொடக்' என்று தண்ணீரைக் குடித்து விடுகிருய்; போகிருய்;

★ தொடர்ச்சி 10ம் பக்கம்

விளையாட்டு தந்த விந்தை!

● "வளரும் பயிர் முளையில்!" என்பார்கள்; அதுபோல வளரும் சிருர்களின் — நாளைய மேதைகளின் — பாலப் பருவ செயல்கள்தான் அவர்களது எதிர்காலத்தின் 'கண்ணுடி' என்று சொல்லலாம். மழலைப் பருவத்தில் அரும்பு உள்ளங்களில் தோன்றும் எண்ணங்கள் — அது உருவெடுக்கும் செயல்கள் — சிலருக்கு விந்தையாகத் தோன்றும்; முட்டாள்தனமாகத் தெரியும்; கோபத்தையும் ஊட்டும்! ஆனல், அச்செயல்களினூடே ஒரு அதி அற்புத உண்மையைத் தேடிக்கொள்ளும் அந்த இள உள்ளம்!

● உதாரணத்திற்கு ஒன்று...அந்தச் சிறுவனுக்கு பள்ளிக் கூடத்தைவிட — விளையாட்டு மைதானத்தைவிட — ரொட்டிக் கடையைவிட—மிகமிகப் பிடித்தமான இடம் எது தெரியுமா? அடுப்பங்கரைதானும்! நாள் முழுதும் அங்கேயே இருப்பதில் அவனுக்கு கொள்ளை மகிழ்ச்சி! அங்கே அவனுக்கு என்ன வேலை என்று கேட்கிறீர்களா? காரணம் இன்னும் விந்தையாக இருக்கும். அடுப்பில், பாத்திரத்தில் வெந்நீர் கொதித்துக் கொண்டிருக்கும்; அதிலிருந்து நீராவி கிளம்பிக்கொண்டிருக்கும்; நீராவியின் வேகத்தில் பாத்திரத்தை மூடியிருக்கும் தட்டு தத்தளிக்கும்; அதைக் கண்டு பையன் சிரிப்பான். இன்னும் அதிகமாக நீரைக் கொதிக்க வைப்பான்; தட்டும் குதிக்கும்; அதைக் கையை வைத்து அமுத்திக் கொள்வான் பையன்; களிப்பான்.

● இதுவும் ஒரு விளையாட்டா என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? விளையாட்டுதான்; ஆனல் வீணை விளையாட்டு அல்ல; விந்தை ஒன்றை உலகுக்கு அளித்த பயனுள்ள விளையாட்டு!

● நீராவியின் அந்த சக்தியைக் கண்டு களித்த அந்தப் பையன்தான், நீராவியின் சக்தியை — அதைக்கொண்டு பெரிய பெரிய இயந்திரங்களை எல்லாம் ஓட்டலாம் என்ற உண்மையை உலகுக்குத் தந்தான் பிற்காலத்தில்.

● புகைவண்டிகள்; விமானங்கள்; பெரிய பெரிய ஆலைகள் இவை அனைத்துக்கும் மூல காரணமாக இருக்கும் நீராவி யந்திரத்தைக் கண்டுபிடித்த அந்த 'ஜேம்ஸ் வாட்'டை விட — அவனுடைய விளையாட்டுக்கு உலகத்தின் நன்றி என்றென்றும் உண்டல்லவா?



இந்த வாரம் பரிசு பெறும் தோழர்.

★ ஓய், சுந்தரராமன்,
அவிசா வெள்ள,
இலங்கை.

எஸ். பி. கேசவன்; தூத்துக்குடி.

(?) காமராசர் எப்போது பேசக் கற்றுக் கொண்டார்?

அரசியல் தாழ்வாரத்தில் தவழ்ந்து, மண்ணையும் கல்லையும் துழாவித் தின்ற பிறகே அந்தக் குழந்தை பேசக் கற்றுக்கொண்டிருக்கிறது!

ஆ. மலர்மன்னன்; திருச்சி.

(?) நேருவுக்கு நெற்றிக் கண் இருந்திருந்தால்?

அதனால் எரிக்கப்படுவதற்கு இந்நேரம் இந்தியாவில் எந்தப் பொருளுமே இருந்திருக்க முடியாது—அழிவு வேலை அவ்வளவு சீக்கிரம் முடிவடைந்திருக்கும்!

கலைவேந்தன்; நாகர்கோயில்.

(?) சியாங்கேஷேக் இருக்கிறாரா?

இல்லை; அமெரிக்க இரைப்பையில் ஜீரணமாகிவிட்டார்!

கா. தியாகராசன்; ஆம்பூர்.

(?) காமன்வெல்த் மாநாடு என்பது என்ன?

அங்கத்தினர் நாட்டுப் பிரதமர்களை ஒருமுறை அரசாங்கச் செலவில் இங்கிலாந்துக்கு உல்லாசப் பிரயாணம் செய்ய அழைக்கும் ஒரு சாதனம்!

(?) திடீரென்று தட்சிணப் பிரதேசம் கிடைத்து விட்டால் ஆச்சாரியார் என்ன செய்வார்?

அதன் பிரதமர் பதவியை அனுபவிப்பதற்கு இன்னும் பத்து ஆண்டுகள் உயிர்வாழ வேண்டுமென்று ஆண்டவனுக்கு 'அப்ளிகேஷன்' போடுவார்!

புதுமைநேசன்; தேனி.

(?) தமிழுக்கு இனிமை என்ற ஒரு பொருள் உண்டா?

காமராசரின் வசைத் தமிழுக்கு நிச்சயம் அந்தப் பொருள் கிடையாது!

ஜெகதீசன்; மணியாச்சி

(?) காமராசர் படிக்காதவரா?

நிச்சயமாக அவர் குமணன் கதையைப் படிக்காதவர்தான்! படித்திருந்தால் இலங்கைத் தமிழர் படுகொலையைப் பார்த்தும், தானும் ஆடாமல் தன் தசையும் ஆடப்பெறாமல் சும்மா இருப்பாரா?

ஓய். சுந்தரராமன்; அவிசாவெள்ள.

(?) வருகிற பொதுத் தேர்தலின் போது ஆச்சாரியார் எங்கு நிற்பார்?

வழக்கம்போல சட்டசபையின் கோல்லைப் பக்கத்தில்-முன் வரிசையில்!

(?) செந்தமிழர் என்று அழைப்பது ஏன்?

இலங்கையிலே சிங்களவரின் கொடுமையால் இரத்தக்கரை ஏற்றிருக்கும் தமிழர்களை அப்படி அழைப்பது பொருத்தம் தான்!

கோவிந்தன்; சென்னை,

(?) வடநாட்டில் வெள்ளம் அதிகமாக ஏற்படுகிறதாமே?

ஆமாம்; இங்கிருந்து சுரண்டிச் சென்று வடநாட்டவரின் துயர வெள்ளத்துக்கு அணை போடுகிறது, டெல்லி பீடம்!

எஸ். பி. சம்பத் குமார்;
குமாரசாமிப்பட்டி.

(?) ஆல் இந்தியா ரேடியோ என்றால் என்ன?

வீண் ஆரவாரம்; வரட்டுத் தவளைக் கூச்சல்—இப்படிப் பல பொருள்!

(?) கேள்விக் குறி ஏன் வளைந்து நிற்கிறது?

அப்படி வளைந்து கொடுத்தாவது நமது அமைச்சர்களிடமிருந்து தக்க பதில் பெறமுடியுமா—என்று பார்ப்பதற்குத்தான்!

வி. அய்யனாரப்பன்;
கோபிசெட்டிபாளையம்

(?) ஸ்டாலினின் சௌக்கியம் எப்படி?

சேத்தும் கெடுக்கிறார் குருஷேவ்.

எல். பி. சாம்பசிவம்; குளித்தலை.

(?) இருபதாம் நூற்றுண்டின் கொலம்பஸ் யார்?

காமராசரைத்தான் சொல்லலாம்! அவர்தான் தி. மு. க. தோழர்கள் செருப்பு போட்டுக்கொண்டு கோவிலுக்குள் நுழைந்ததாக ஒரு கற்பனைக் குற்றச்சாட்டைக் கண்டு பிடித்திருக்கிறார்.

★ 'முரசொலி' வழங்கும் இலக்கியச் செல்வம்! ★

ஆகஸ்டு முதல் வெளி வருகிறது

முத்தாரம்

★ சிந்தனைக்கு விருந்தூட்டும் சிறு கதைகள் —
★ செந்தமிழ்த் தேனூறும் இலக்கியக் கட்டுரைகள் —
★ சுவை மணக்கும் தொடர் சித்திரங்கள் —
★ சுந்தர மொழியினிலே மேல்நாட்டுக் காவியங்கள் —
★ கண்கவர் ஓவியங்கள் —

ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மலர் போல பூத்துக் குலுங்க இருக்கிறது!

ஆசிரியர்: மு. கருணாநிதி
வெளியிடுபவர்: மாறன் எம். ஏ.

மாத ஏடு :: விலை எட்டணா

விபரங்கட்கு:
அஞ்சல் பெட்டி எண் 712, சென்னை-6.

"வெள்ளி வீதி"
இப்போது
20 பக்கங்களுடன்
புதிய அமைப்பில்
வெளிவருகிறது!
விண்ணப்பிக்கவும்:
28-3, கிரகாம்ஸ் ரோடு,
சென்னை—6.

'முரசொலி'

இலங்கை, உள் நாடு

ஆண்டு சந்தா	6-0-0
6-மாத சந்தா	3-8-0

வெளிநாடு

ஆண்டு சந்தா	7-0-0
ஆறுமாத சந்தா	4-0-0

கோபாலகிருஷ்ணன்;
மார்த்தாண்டம்பட்டி.

(?) தி. மு. க. தேர்தலில் தோற்றால்......?

ஒன்றும் குடி முழுகி விடாது. காங்கிரசை சுலபத்தில் வெற்றி பெற விடக்கூடாது என்பது தான் எங்கள் நோக்கம்!

கோதண்டராமன்;
திருமலைராயன் பட்டினம்.

(?) எவரெஸ்டை விட உயரமான சிகரம் இருக்கிறதா?

இருக்கிறது, அதன் பெயர் புகழ்ச் சிகரம்! அதில் ஏறுவதுதான் சிரமம், ஆனால் ஒரு நொடியில் இறங்கி விடலாம்!

அப்துல் மஜீத்; சுந்தரபாண்டியம்.

(?) கங்கைக் கரைக்கும், காவிரிக் கரைக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

கங்கைக் கரை ஏமாற்றுக் கருவியான தர்ப்பைப் புல்லுக்கும், காவிரிக்கரை உழைப்பின் பலனை நெற் கதிருக்கும் பெயர் பெற்றது!

(?) காங்கிரஸ் கட்சியை எதற்கு ஒப்பிடலாம்?

அது ஒரு பாலாறு. வரட்டு மதி படைத்த 'மணல் மனப்பான்மையினர்'தான் அங்கே இருக்கிறார்கள்!

கோகுல கிருஷ்ணன்; குடந்தை.

(?) காமராசர் ஏன் இப்போது அதிகமான சுற்றுப் பயணத்தில் ஈடு பட்டிருக்கிறார்?

திருச்சி மாநாடு கொடுத்திருக்கும் சாவியிலே அந்த விளுடி முள் நாட்டைச் சுற்றிச் சுற்றி வருகிறது அன்பரே!

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட் ரோடு, சென்னை-6.